# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவ...

மலர் : 03, இதழ் : 11 சுபகிருது வருடம், ஆனி மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை (06.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 06, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50




## நெருக்கடிக்கு பொறுப்பேற்று உடனடியாக பதவி விலகுங்கள்

### ஜனாதிபதி, அரசாங்கத்தை கேட்கிறார் பேராயர் மெல்கம் ரஞ்சித்

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து, முழுமையான முறைமை மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக ஜனாதிபதியும் அரசாங்கமும் இராஜினாமா செய்வதோடு, புதிய இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கவேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் அறிக்கையொன்றின் ஊடாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

02 பக்கம்



## வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்...

### கிளிநொச்சி மீனவர்கள் எரிபொருளை நம்பாமல் கையாண்ட புதுயுக்தி

02 பக்கம்



# 6 மாதங்களுக்குள் நாட்டை மீட்கும் அநுரகுமாரவின் திட்டம் வெற்றிபெறுமாயின் அரசு பதவி விலக ரெடி!

## பிரதமர் பதவியையும் இராஜினாமா செய்யத் தயார் என்கிறார் ரணில்

03 பக்கம்

## மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப்படக்கூடும்

### அமைச்சர் காஞ்சன சூசகம்

எதிர்வரும் நாட்களில் மண்ணெண்ணெய் விலையை கட்டாயம் அதிகரிக்க வேண்டியேற்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

கடந்த காலங்களில் நாட்டு மக்களுக்கு மின்சாரம், நீர் மற்றும் எரிபொருள் என்பவற்றை குறைந்த விலைகளிலேயே அரசாங்கம் வழங்கிவந்தது.

02 பக்கம்



## கோட்டாவை பாதுகாப்பாக அமெரிக்கா அனுப்புவோம்

### சொல்கிறார் வாசுதேவ

02 பக்கம்

# 'கோ ஹோம் கோட்டா' சபையில் கோஷம்

- ஜனாதிபதியின் முகத்திற்கு நேரே எதிர்க்கட்சிகள் அமளி
- சபை ஒத்திவைப்புடன் இடைநடுவில் வெளியேறிய கோட்டாபய







02 பக்கம்

## இவர்கள் ஒன்றும் யாசகர்கள் அல்ல...



எரிபொருளைப் பெற ஐந்து நாட்க ளாக ஹோர்ட்டன் பிளேஸ் எரி பொருள் நிலையத்திற்கு அருகில் தங்கியிருக்கும் வாகன சாரதிகள் வீதி யோரத்தில் நித்திரை செய்யும் காட்சி..

## எரிபொருள் வரிசையில் மேலுமொருவர் மரணம்



பொரளை டிக்கல் வீதியில் உள்ள ஐ.ஓ.சி. பெற்றோல் நிலையத்தில் வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் தனது காரில் இருந்தபடியே உயிரிழந்துள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

02 பக்கம்

## மூன்று வேளைகளுக்கான உணவைப் பெறமுடியாத நிலை

### வெளியானது முக்கிய தகவல்

இலங்கையில் வேகமாக அதிகரித்துவரும் பணவீக்கம் காரணமாக இலங்கை மக்கள் மூன்றுவேளை உணவைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## அதிகாரத்தை பலவந்தமாக கைப்பற்ற முடியாத எதிர்க்கட்சி

### நாடாளுமன்ற எதிர்த்தரப்பு உலகின் மிக மோசமானதென ரணில் பரிகாசம்

02 பக்கம்

## உஷ்



பொலிஸ் மா அதிபரை பதவியில் இருந்து நீக்குமாறு ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் பொதுஜன பெரமுன எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர் திட்டமிட்டு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வேலைகளை செய்துவருவதாக அந்த எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எம்.பிக்கள் வீடுகள் எரிப்பதை கவனிக்காமல் விட்ட ஐ.ஜி.பி. இப்போது கரும்புலிகள் தினமன்று தாக்குதல் நடக்கலாமென எச்சரிக்கை விடுத்துள்ளார். ஸ்திரமற்ற அரசு என்று காட்டுவதற்கு ஐ.ஜி.பி. முயல்கிறாராம்.

## நாட்டு மக்களுக்குத் தேவை பிரச்சினைகளுக்கான தீர்வே

### அரசாங்கம் அக்கறையின்றி செயற்படுவதாக சஜித் நாடாளுமன்றில் குற்றச்சாட்டு



•யோ.தர்மராஜ்

நாடும் மக்களும் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காது நாங்கள் முன்வைக்கும் கருத்தை தடுக்கும் வகையில் எங்களுடைய வாய்களை மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என சபாநாயகரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரித்தார்.

02 பக்கம்

## நாட்டின் இன்றைய நிலையை 6 மாதங்களில் சரிசெய்ய முடியாது

### ரணிலுக்கு பதிலளித்தார் அநுரகுமார



•யோ.தர்மராஜ்

நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டாலும் ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டிருந் தாலும் அந்த கதிரையில் அமர்வதற்கு இருவருக்கும் மக்களாணை இல்லை. ஆறு மாதங்களில் மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்து பின் பொதுத் தேர்தலுக்குச் சென்று ஸ்திரமான அரசாங் கத்தை அமைப்பதற்கான வாய்ப்பை மக்களுக்கு வழங்கு வதே எங்களுடைய 6 மாத கால...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

"கோட்டா கோ ஹோம்" எண்டு இங்கே கத்துறது விளங்காவிட்டா... 'கோட்டா கம் ஹோம்' எண்டு அமெரிக்காவில போய் தான் கத்தோனும் என்னங்கோ..






## மண்ணெண்ணெய் விலை...

இதற்காக ஏற்படும் செலவுகளை திறைசேரியினால் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், தற்போதைய நிலைமையில் அதனை செய்ய முடியாது. மண்ணெண்ணெய் தற்போது 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதற்காக 420 ரூபா செலவு ஏற்படுகிறது. எனவே, எதிர்வரும் நாட்களில் கட்டாயமாக மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

எரிபொருளை இறக்குமதி செய்வது எமக்கு சவாலான ஒரு விடயமாக மாறியுள்ளது. எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கு நாம் முயற்சிக்கவில்லை. எரிபொருள் சுத்திகரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதனை விற்பனை செய்யவும் எதிர்பார்க்கவில்லை. எரிபொருள் சுத்திகரிப்பை அதிகரிக்க வேண்டுமாயின் அதனை செய்ய வேண்டும். புதிய சுத்திகரிப்பு நிலையத்தை கூட நிர்மாணிக்க வேண்டும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலை எண்ணெய் தாங்கியை மையப்படுத்தி, புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்கினால், நாட்டின் தேவைக்கு மாத்திரமல்லாமல், ஏற்றுமதி சந்தைக்கும் எம்மால் செல்ல முடியும். அதுவே எமது எதிர்பார்ப்பாகும்.

மின் உற்பத்தி செய்வதற்கு புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களுக்கு நாம் செல்ல வேண்டும். டீசலுக்கோ உலை எண்ணெய்க்கோ செல்லக் கூடாது. அதற்கான வாய்ப்பை முதலீட்டாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். பிரதமரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அழைப்பு விடுத்துள்ளார். எரிபொருள் இறக்குமதி செய்யும் செயன்முறையில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

நாட்டு மக்கள் மிகவும் துயரமான நிலையில் வீதிகளில் இருக்கின்றனர். எரிபொருளை பெற முடியாமல், சமையல் எரிவாயுவை பெற முடியாமல் உள்ளனர். ஜூலை மாதம் எண்ணெய் இறக்குமதி செய்தால், ஓகஸ்ட் மாதம் எண்ணெய்யை கொண்டுவருவது சவாலாக இருக்கும். இம்மாதம் எமக்கும் 500 மில்லியன் டொலர் எரிபொருளுக்கென தேவையாக உள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களுக்கும் அதாவது 10 நாட்களுக்கு 319 மில்லியன் டொலர்கள் தேவை. மத்திய வங்கியிடம் 125 மில்லியன் டொலரே உள்ளது. இதனை எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடினோம். இதற்கு தனியார் வங்கியிடமும் ஏற்றுமதி தரப்பினரிடம் உதவியை கோரியுள்ளோம்.

## நாட்டின் இன்றைய நிலையை...

யோசனை என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (05) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு பிரதமர் தெரிவித்த விடயம் குறித்து கருத்து தெரிவித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடாளுமன்றத்தில் என்னையும் எங்களுடைய கட்சி மற்றும் எங்களுடைய திட்டங்கள் தொடர்பாக தொடர்ந்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், எங்களுடைய யோசனைகள் புதிதானதல்ல. நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான யோசனைகள் சிலவற்றை நாங்கள் கடந்த மே மாதம் முன்வைத்தோம். அதில், தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகி நாட்டை எங்களிடம் ஒப்படைத்தால், 225 பேரில் உரிய அமைச்சரவையை உருவாக்கி அரசாங்கத்தை அமைப்பதற்கு நாங்கள் தயார் என்றே கூறினோம். அதிகாரத்தை பொறுப்பேற்றுக்கொள்வதற்கு தயார் இல்லை என நாங்கள் ஒருபோதும் கூறவில்லை. ஆனால், பிரதமருக்கு தங்களுக்கு தேவையான விடயங்கள் மாத்திரமே அவரின் காதுகளுக்கு கேட்கின்றன.

எமது கோரிக்கைக்கு இடமளிக்காவிட்டால் எந்தவொரு தரப்பும் ஆட்சியமைத்து, உரிய திட்டத்தை முன்வைத்தால் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்குவதற்கு தயார் என்றே கூறினோம். எனினும், அதே மாதத்தில் புதிய பிரதமர் பதவி ஏற்றுக்கொண்டீர்கள்.

நீண்டகாலமாக பின்பற்றப்பட்ட பொருளாதார கொள்கைகள், அது தொடர்புபட்டுள்ள அரசியல் கலாசாரங்களினாலேயே இன்று பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இது பொருளாதார நெருக்கடியில் அரசியல் நெருக்கடியை மூடுவதற்கு முயற்சிக்கின்றனர். இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் கலாசாரமே முக்கிய பங்கு வகிக்கின்றன.

எங்களுக்கு பொறுப்பை வழங்க தயார் என்றால் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கு நாங்கள் தயார். நீங்கள் செய்வதாயின் அதற்கான திட்டத்தை முன்வையுங்கள். அதன் பின்னர் பொதுத் தேர்தலுக்குச் செல்லலாம். நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டாலும் ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டிருந்தாலும் அந்த கதிரையில் அமர்வதற்கு இருவருக்கும் மக்களாணை இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். குறைந்தது எனக்கு நாடாளுமன்றத்தில் அமர்வதற்கு மக்களாணை உள்ளது. ஆனால், உங்களுக்கு அதுவுமில்லை.

நீங்கள் ஜனநாயகவாதி எனக் கூறுகின்றனர். ஆனால், மக்களாணை இல்லாத நீங்கள் எவ்வித காலவரையறையுமின்றி பிரதமர் பதவியில் அமர்வது ஜனநாயகமா? இதனை மீறி நீங்கள் அக் கதிரையில் இருந்து எழுந்திட விரும்பவில்லை என்றால் அதற்கு நான் எதிர்ப்பு. வீழ்ச்சியடையும் பொருளாதாரத்தை 06, 07 மாதங்களில் மீட்க முடியும் என நம்பிக்கை கொள்ளமுடியாது. ஆனால், அந்த ஆறுமாதத்தில் மக்களுக்கு எரிபொருள் வழங்கல், எரிவாயு வழங்கல், மருந்துப் பொருட்கள் வழங்கல், பாடசாலைகளை மீளத் திறத்தல், அரச நிறுவனங்களை திறத்தல், மூடப்படும் அபாயத்திலுள்ள தொழிற்சாலைகளை பாதுகாத்தல், மீனவர்கள் கடலுக்குச் செல்லல், விவசாயிகள் வயலுக்குச் செல்லல் போன்றவற்றை சாதாரண நிலைமைக்குக் கொண்டுவர முடியும். இவற்றை ஆறுமாதங்களில் செய்ய முடியாதா? இவற்றையே செய்ய வேண்டும் என்றே நான் கூறினேன்.

06 மாதங்களுக்கு பின்னர் பொதுத் தேர்தலுக்குச் செல்வோம். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஸ்தீரமான அரசாங்கத்தை தாண்டி நம்பிக்கையான அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும். நம்பிக்கையில்லாத அரசாங்கத்தால் நெருக்கடிக்கு தீர்வை வழங்க முடியாது. இன்று ஜனாதிபதி மீது யாரும் நம்பிக்கை வைக்கவில்லை.

நம்பிக்கை அரசாங்கத்தை உருவாக்குவதற்கு சிலர் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால், தேர்தல் ஒன்றின் ஊடாக நம்பிக்கையான அரசாங்கத்தை உருவாக்குவதே எங்களுடைய 06 மாத கால திட்டமாகும். ஆனால், 06 மாதங்களில் கடன் சுமை, ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, பொருளாதார வீழ்ச்சி என்பவற்றிலிருந்து 06 மாதங்களில் மீள முடியும் என நாங்கள் கூறவில்லை. எனவே, எனக்கு நோபல் பரிசு வழங்க வேண்டாம். நீங்கள் பதவி விலகினாலும் என்னை பிரதமராக நியமிக்கமாட்டார்கள். உங்களை நீக்குவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நீங்கள் பதவி விலகி, என்னை நியமிப்பதற்கும் உங்களுக்கு அதிகாரமில்லை – என்றார்.

## நாடு மக்களுக்குத் தேவை...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நேற்று (05) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பிரதமர் ஆற்றிய விசேட உரை குறித்து கருத்து தெரிவித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் நிலைமை குறித்து பிரதமர் சபையில் கருத்து தெரிவித்தார். எனினும், நாடாளுமன்றத்தை கூட்டி வெறும் கருத்துகளையும் குற்றச்சாட்டுகளையும் ஒருவருக்கு ஒருவர் அள்ளி வீசிக்கொள்ளும் களமாக மாறியுள்ளது என்றே மக்கள் நினைக்கின்றனர். நாடும் மக்களும் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக, மரணத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் மக்கள் போராடிக்கொண்டிருக்கும்போது, மக்கள் அதற்கான தீர்வையே எதிர்பார்க்கின்றனர்.

ஏற்கனவே, அனைவரும் அறிந்ததையே இங்கு மீண்டும் மீண்டும் கூறுகின்றனர். இதன்போது, சபாநாயகர் குறுக்கிட்டு கருத்து தெரிவித்ததால், ஆளுந்தரப்புக்கு இடமளித்தது போன்று, எங்களுக்கு இடமளிக்க வேண்டும். எங்களுடைய வாய்களை மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகரிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

வங்குரோத்து அடைந்துள்ளதாக பிரதமர் கூறினார். அது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால், வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கான தீர்வென்ன, எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களுக்கான பதில் என்ன. திரிபோஷா தொழிற்சாலை மூடப்பட்டதால், இன்று நாட்டில் திரிபோஷா இல்லை. கர்ப்பிணி தாய்மார்களுக்கு திரிபோஷாவைக் கூட வழங்க முடியாத அரசாங்கம் இது.

தொடர்ந்தும் சபை நடவடிக்கைகளுக்கு இடமளிக்குமாறு சபாநாயகர் கோரியபோது, எங்களுடைய வாய்களை மூடுவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். நாங்கள் பிரதமருக்கு பதிலளிக்க வேண்டும். இங்கு சத்தமிடும் யாருக்கும் நான் பயமில்லை.

வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கான தீர்வெங்கே? பெருந்தோட்ட மக்களுக்கான தீர்வெங்கே? நடுத்தர வர்க்க வர்த்தகர்களுக்கான தீர்வெங்கே, நிர்மாணப் பணியாட்கள், சுற்றுலாத்துறை, பாடசாலை மாணவர்களுக்கான தீர்வெங்கே? எங்களுடைய வாய்களை மூடுவதற்கு முயற்சிக்க வேண்டும். இங்கு இல்லை என்றாலும் வீதியில் எங்கள் போராட்டத்தை முன்னெடுப்போம். எங்களுக்கு பேசுவதற்கு உரிமையில்லையா, எங்களுக்கான உரிமையை வழங்க வேண்டும்.

எதிர்வரும் பருவத்துக்கு தேவையான உரங்கள் இல்லை. ஆனால், அடுத்த பருவத்தில் விளைச்சலை அதிகரிப்பதாக பிரதமர் கூறினார். ஊழல் மோசடிகளை குறைக்க வேண்டும். தற்போது அமைச்சராகவுள்ள ஒருவர் ஜப்பான் நிறுவனத்திடம் இலஞ்சம் கோரியதாக ஜனாதிபதி அமைச்சரவையில் குழப்பமடைந்துள்ளார். அன்று கட்டார் மானியத்தை பயங்கரவாத செயற்பாடுகள் எனக் கூறினர். ஆனால், இன்று அங்குச் சென்று எரிபொருள் வழங்குமாறு கூறுகின்றனர். இது வெட்கமடைய வேண்டியது.

அமரர் ரணசிங்க பிரேமதாச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரே கட்டார் நாட்டின் கௌரவத்தை பெற்ற இருவராகும். ஆனால், இன்று கட்டார் நாட்டிற்குச் சென்று பிச்சை எடுக்கின்றனர் - என்றார்.

## அதிகாரத்தை பலவந்தமாக...

**யோ.தர்மராஜ்**

நான் இரண்டு, மூன்று முறை அதிகாரத்தை கைப்பற்றினேன். எனினும், அவற்றிலிருந்து எதிர்க்கட்சியினர் எதனையும் கற்றுக்கொள்ள வில்லை. பலவந்தமாக அதிகாரத்தை கைப்பற்ற முடியாத எதிர்க்கட்சியை வைத்துக்கொண்டு என்ன செய்வது? என பிரதமர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பினார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (05) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த விடயம் குறித்து கருத்து தெரிவித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கட்டார் நாட்டில் இயற்கை வாயு மாத்திரமே பெற முடியும். அங்கு பெற்றோலை பெற முடியாது. எங்களுக்கு பெற்றோலே தேவை. அதனை கட்டாரில் பெற முடியாது. வேறு நாட்டிலேயே அதனைப் பெற முடியும். அவ்வாறாயின், நாங்கள் கட்டாருக்குச் சென்று என்ன செய்வது? அபுதாபி, டுபாய், ஓமான் போன்ற நாடுகளிலுள்ள நிறுவனங்களிலேயே பெற்றுக்கொள்ள முடியும். மாறாக, எந்தவொரு நாட்டிலும் நாங்கள் எரிபொருளை பெற முடியாது.

அன்று பிரேமதாச ஜனாதிபதியின் பிரதிநிதியாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு நான் சென்ற போதிலும் எங்களால் நிதியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. நான் ஜப்பான் நாட்டுக்குச் சென்ற போது, அப்போதைய பிரதமர் வழங்கிய 600 மில்லியன் டொலர் நிதியினாலேயே அன்று குவைட் யுத்தத்திலிருந்து நாங்கள் மீட்டெழுந்தோம்.

இவற்றை பற்றி பேசும் எதிர்க்கட்சித் தலைவர், -7 ஆக உள்ள பொருளாதார வளர்ச்சியை 6 மாதங்களில் ப்ளஸ் ஆக மாற்றுவது எவ்வாறு என்பது குறித்து இன்னும் பதிலளிக்கவில்லை. இன்று 20 பில்லியன் டொலர் இல்லாது போயுள்ளது. ஊழலை நிறுத்துவதன் ஊடாக ஒன்று அல்லது இரண்டு பில்லியன் டொலர் மீதப்படலாம். ஏனையவற்றை எதுவும் செய்ய முடியாது.

ஆனால், அதிகாரத்தை கைப்பற்ற முடியாத எதிர்க்கட்சியை வைத்துக்கொண்டு என்ன செய்வது. நான் அவர்களுக்கு பயிற்றுவித்துள்ளேன். நான் இரண்டு, மூன்று முறை அதிகாரத்தை கைப்பற்றினேன். எனினும், அவற்றிலிருந்து அவர்கள் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் என்னிடம் வாருங்கள் அதிகாரத்தை எவ்வாறு கைப்பற்றுவது என்பதை கற்றுத்தருகின்றேன். அதனைவிடுத்து, சத்தமிட்டுக்கொண்டிருந்தால் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமாயின், அனைவரையும் இணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும். உலகத்தில் மோசமான எதிர்க்கட்சியே இங்குள்ளது. பலவந்தமாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். அதனை விடுத்து பதாதைகள் ஏந்திக்கொண்டு கோஷமிட்டால் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது – என்றார்.

## 'கோ ஹோம் கோட்டா'...

**யோ.தர்மராஜ்**

முழு நாட்டின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நீண்ட இடைவெளிக்கு பின்னர் நேற்று நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை நேரடியாக சந்திக்க நேரிட்டது.

'கோ ஹோம் கோட்டா' என எதிர்க்கட்சிகள் சபையில் கோஷம் எழுப்பி அமளி துமளி செய்ததால் சபை நடவடிக்கைகளும் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (05) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இதன்போது, நாட்டின் நெருக்கடிகள் மற்றும் அதற்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க சபையில் விசேட உரையொன்றையும் ஆற்றினார். பிரதமரின் உரையை உன்னிப்பாக கவனித்துகொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பிரதமரின் உரை முடியும் தருவாயில் எதிர்க்கட்சிகளினால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

முழு நாடும் பல மாதங்களாக கோ ஹோம் கோட்டா என பலத்த கோஷங்களுடன் போராட்டங்களையும் முன்னெடுத்துவருகின்ற நிலையில், எதிர்க்கட்சிகளும் அதே கோஷத்துடன், கோ ஹோம் கோட்டா என்ற பதாதைகளை ஏந்தி ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதுவரை, கோ ஹோம் கோட்டா என ஜனாதிபதியின் முகத்துக்கு நேராக யாரும் கூறாத நிலையில், நேற்று சபைக்கு வருகைத் தந்த ஜனாதிபதியின் முகத்துக்கு நேராக கோ ஹோம் கோட்டா என எதிர்க்கட்சிகள் கோஷமிட்டது சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஆளுந்தரப்பில் பிரதமருக்கு அருகில் அமர்ந்திருந்து ஜனாதிபதியை கோ ஹோம் கோட்டா எனக் கூறி அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கதிரையிலிருந்து எழுந்து நின்று கோஷமிட்டதால், சபாநாயகரினால் சபை நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது போனது.

அனைத்து உறுப்பினர்களும் அமைதியாக ஆசனங்களில் அமருமாறு பல முறை சபாநாயகர் வலியுறுத்தியபோதிலும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோ ஹோம் கோட்டா என பதாதைகள் ஏந்தி, பலத்த கோஷம் எழுப்பியதால், சபாநாயகரினால் சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த அமளியை ஜனாதிபதி புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்த அதேசமயம் 'வீ நீட் கோட்டா' என்று ஆளுங்கட்சி பக்கமிருந்தும் எம்.பிக்கள் பலர் கோஷமெழுப்பியதை காணமுடிந்தது.

இதனையடுத்து, சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியபோது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாது நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினார்.

இதேவேளை, ஜனாதிபதி ஒருவர் நாட்டில் இருந்தாலும் அவரை கண்ணில் காணவே கிடைக்கவில்லை என நேற்றுமுன்தினம் விமல் வீரவங்ச சபையில் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த நிலையிலேயே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (05) சபை அமர்வில் கலந்துகொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# புகையிரத சேவையை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## போக்குவரத்து சபைக்குரிய பஸ்கள் அதிகளவு சேவையில்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை மற்றும் பஸ் கட்டண அதிகரிப்பு ஆகிய காரணங்களினால் மக்கள் அதிகமாக புகையிரதத்தையே பயன்படுத்துகின்றனர். பெருமளவான மக்கள் கொழும்பு புறநகர்ப் பகுதிக்கு வருவதற்கு புகையிரத சேவையை பயன்படுத்துவதால் புகையிரதத்தில் அதிக நெரிசலுடன் பயணிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகி இருக்கின்றனர்.

நேற்றும் கொழும்பு புறக்கோட்டை பிரதான புகையிரத நிலையத்தில் பெருமளவான மக்கள் வருகை தந்திருந்தனர். தற்போது அலுவலகங்களில் ஊழியர்களை வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் அழைக்கப்படும் நிலையிலும் புகையிரதத்தில் பயணம் செய்பவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். முழுமையாக ஊழியர்களை அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரிக்கலாம் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, டீசல் பிரச்சினை காரணமாக தனியார் பஸ்கள் மிகக் குறைந்தளவிலேயே சேவையில் ஈடுபடுகின்றன. எனினும், அரச பஸ்கள் 24 மணிநேரமும் முழுமையாக சேவையில் ஈடுபடுவதாகவும் மக்கள் அச்சமின்றி அரச பஸ்களில் பயணிக்க முடியும் எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்தின் பஸ் இயக்குனர் பிரிவின் உதவி முகாமையாளர் எம்.கீர்த்திபால தெரிவித்தார்.

நேற்றுக் காலை புறக்கோட்டை அரச பஸ் நிலையத்தில் போதியளவு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்ததுடன், பெருமளவான பயணிகளும் பஸ் நிலையத்திற்கு வருகைதந்ததையும் காணமுடிந்தது.

# சஜித் - ஐக்கிய அரபு இராச்சிய தூதுவருக்கிடையில் சந்திப்பு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் கலித் நசார் அல் அமெரி (Khalid Nasser Al Ameri) ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று (05) தூதரகத்தில் இடம்பெற்றது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதோடு, இலங்கை தற்போது எதிர்நோக்கிவரும் எண்ணெய் நெருக்கடி குறித்தும் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சியம், மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாகும் என்பதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான 40 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிவரும் வலுவான உறவு குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது நினைவுகூர்ந்தார்.

முறையான, வலுவான மற்றும் வெளிப்படையான வேலைத்திட்டத்தின் மூலம் இலங்கையை கட்டியெழுப்ப தனது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் இதன்போது தூதுவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதியளித்தார்.

## எரிபொருள் வரிசையில்...

அங்கொட, கொதட்டுவ பிரதேசத்தில் வசித்து வந்த ஹேவாகம திசாநாயக்க என்ற சுஜீவ விக்கும் குணரத்ன (வயது 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் எரிபொருள் எடுப்பதற்காக காரில் வந்ததாக தகவல் கிடைத்துள்ளதாக பொரளை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.ஜே.எம்.ஆர்.சமரசிங்க தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## வாழ நினைத்தால் வாழலாம்...

எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை. எனினும் கிளிநொச்சி மீனவர்கள் தங்கள் குடும்பத்துக்கும் தேசத்துக்கும் உணவளிப்பதை சவாலாக ஏற்றுக்கொண்டனர்.

படுக்கை விரிப்புகள் மற்றும் இதர அடர்த்தியான துணிகளைப் பயன்படுத்தி அவர்கள் இயந்திரப் படகுகளை பாய்மரப் படகுகளாக மாற்றி மீன்பிடியில் ஈடுபடுவதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## நெருக்கடிக்கு பொறுப்பேற்று...

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக, இலங்கையின் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் நான் அன்புடன் கேட்டுக்கொள்வது என்னவென்றால், அவர்கள் இனி பதவியில் நீடிப்பதற்கு தார்மீக உரிமை இல்லாததால், பொறுப்பை ஏற்று தங்கள் பதவிகளில் இருந்து அவர்கள் விலக வேண்டும். இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கு மேலும் துன்பத்தை ஏற்படுத்தாமல் அதிகாரத்தை மீண்டும் மக்களிடம் ஒப்படைத்து விடுமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் பதவி விலகினால் அனைவருக்கும் நம்பகமான மற்றும் வெளிப்படையான கட்சி இடைக்கால அரசாங்கத்தை மக்கள் நிறுவ முடியும். இத்தகைய குறுகிய கால அரசாங்கம் நிபுணர்களின் அறிவுறுத்தல்களுடன் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டின் நிலைமை மேம்பட்டவுடன், கூடிய விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவது அவசியம்.

மேலும் இந்த நிலையில் இருந்து தேசத்தையும் மக்களையும் விடுவிப்பதற்கு, தங்கள் அற்ப அரசியல் மற்றும் சித்தாந்த வரம்புகளைத் துறந்து ஒற்றுமையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பணியாற்ற முன்வருமாறு எதிர்க்கட்சியில் உள்ள அனைத்து அரசியல் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மூன்று வேளைகளுக்கான...

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பலரது வாழ்வாதாரமும் ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றது. உணவுகளின் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் உணவு சாப்பிடும் வேளைகளை குறைக்க நேரிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஜூன் மாதம் பணவீக்கம் 54.6 வீதமாக பதிவாகியது. போக்குவரத்து கட்டணங்களும் 128 வீதமாக அதிகரித்துள்ளது. உணவு பணவீக்கம் 80.1 வீதமாக பதிவாகியுள்ளதாக புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கும் போஷாக்கான ஒரு வேளை உணவை சாப்பிட இலங்கை குடும்பம் ஒரு மாதம் 93 ஆயிரத்து 675 ரூபாவில் இருந்து ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 868 ரூபா வரை சம்பாதிக்க வேண்டும் என உணவு பணவீக்கத்தை அளவிடும் நிபுணரான பொருளாதார நிபுணர் ரேஹான தௌபிக் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையில் நடுத்தர குடும்பம் ஒன்றின் மாதாந்த வருமானம் 76 ஆயிரத்து 414 ரூபாவாக இருக்கின்றது.

இலங்கை சனத்தொகையில் 20 வீதமாக இருக்கும் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் சராசரி மாத வருமானம் 17 ஆயிரத்து 572 ரூபா என புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி காரணமாக மக்கள் படும் கஷ்டங்களை மேலும் உக்கிரமாக்கும் வகையில் மரக்கறிகளின் விலைகளும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன.

கடந்த ஆண்டு 145 ரூபாவாக இருந்த ஒரு கிலோ அரிசியின் விலை தற்போது 230 ரூபாவாக அதிகரித்துள்ளது எனவும் அந்த சர்வதேச செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

## கோட்டாவை பாதுகாப்பாக...

முழு நாடும் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இதனால், ஜனாதிபதிக்கு தற்போது மக்களின் ஆதரவு இல்லை. இந்த நிலையில், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றின் கீழ் நாட்டில் காணப்படும் உக்கிரமான நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வந்து, தேர்தலை நடத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புடன் அமெரிக்காவுக்கு செல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவும் தயார். ஜனாதிபதியை பரிதாபகரமான நிலைமைக்குள் தள்ள எதிர்பார்க்கவில்லை.

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்க வேண்டிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

# கோப் குழு தீர்மானங்களை நிறைவேற்றாத அதிகாரிகள் தொடர்பில் விசேட நடவடிக்கை எடுக்க ஆராய்வு

## அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவிப்பு

கோப் குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களை நிறைவேற்றாத அதிகாரிகள் தொடர்பில் விசேட நடவடிக்கை எடுப்பது குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் (04) நாடாளுமன்றத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கோப் குழு உறுப்பினர்கள் பங்குபற்றிய இந்தக் கூட்டத்தில் பிரதானமாக மூன்று விடயங்கள் தொடர்பில் குழு உறுப்பினர்களின் கருத்துகள் பெறப்பட்டன. அதற்கமைய 2022 பெப்ரவரி 23 முதல் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கோப் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த மீளாய்வும் இதன்போது மேற்கொள்ளப்பட்டது. இந்தக்



காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை ஓர் அறிக்கையாக தயாரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையின் பிரதிகளை குழு உறுப்பினர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கோப் தலைவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், இலங்கை மத்திய வங்கி, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, அபிவிருத்தி லொத்தர் சபை, வரையறுக்கப்பட்ட கட்டடப்பொருட்கள் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட லிற்றோ கேஸ் லங்கா மற்றும் வரையறுக்கப்பட்ட லிற்றோ கேஸ் டெர்மினல் லங்கா தனியார் நிறுவனம் உள்ளிட்ட சில நிறுவனங்கள் தொடர்பான தீர்மானம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். இந்த நிறுவனங்கள் தொடர்பில் குழு வழங்கிய சில தீர்மானங்களுக்குரிய அறிக்கைகள் இதுவரை குழுவுக்கு வழங்கப்படவில்லை எனவும் குழுவின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றாத அதிகாரிகள் தொடர்பில் கடுமையாகச் செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அதற்கு நாடாளுமன்றமும் குழுவும் மேலும் தலையிட வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டனர். விசேடமாக, இது ஊடக நிகழ்ச்சியோ அல்லது கதைப்பெட்டியோ என்ற நிலையிலிருந்து தாண்டிச்சென்று முக்கிய பணிகள் நடைபெறும் இடம் என்பதை பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று 6ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை இடம்பெறவுள்ளது. அதிலொரு அங்கமாக எண்ணெய்க்காப்பிடல் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆரம்பமாகியுள்ளது.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மஞ்சள் மீட்பு!

**(கிளிநொச்சி நிருபர்)**

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை வெட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட ஒருதொகை மஞ்சளும் கிருமிநாசினியும் நேற்று முன்தினம் (04) இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 66ஆவது படைமுகாம்களின் இராணுவத்தினரால் மீட்கப்பட்டு பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் பொருட்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 65 பெரிய பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2000 கிலோ மஞ்சளும், 03 பைகளில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இம்மஞ்சள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தொகை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுவதுடன், சந்தேகநபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவனொளிபாதமலை வீதி காட்டில் வேட்டையாடிய ஆறு பேர் கைது

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

இரத்தினபுரி - சிவனொளிபாதமலை வீதியில் சமனல வனத்தில் மிருகங்களை வேட்டையாடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த 6 சந்தேக நபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இரத்தினபுரி வேவல்வத்தை மூக்குவரத்தை பிரதேசத்தில் சிறிய லொறியொன்றை நிறுத்திவிட்டு காட்டினுள் நுழைந்த இவர்கள் மிருகங்களைத் துப்பாக்கியால் சுட்டு அவற்றைத் தேடி அலைந்து திரிந்தபோது பிரதேசவாசிகள் இவர்கள் தொடர்பான தகவலை பொலிஸாருக்கு வழங்கியதால் லொறியில் தப்பிச் செல்லும்போது கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும் நிவித்திகலை பிரதேசத்தை சேர்ந்த 25 முதல் 35 வயதைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்று, துப்பாக்கி சன்னங்கள், வெற்றுச்சன்னங்கள், கத்திகள் மூன்று உட்பட வேட்டைக்காக பயன்படுத்தப்பட்ட மேலும் சில உபகரணங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 6 மாதங்களுக்குள்...

யோ.தர்மராஜ்

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் மீட்பதற்கான அநுரகுமார திஸாநாயக்கவின் திட்டங்கள் வெற்றியளித்தால் நானும் இந்த அரசாங்கமும் பதவி விலகுவதற்கு தயாராக இருக்கின்றோம். பின்னர் அவரை பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்போம் - என பிரதமர் ரணில் விக்ரமசிங்க சபையில் பகிரங்கமாக அறிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (05) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு அறிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை எங்களால் வெற்றிகரமாக தொடர முடிந்தது. பல்வேறு இணக்கப்பாடுகளுக்கும் வர முடிந்தது. இதற்கு முன்னரும் பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துடன் எமது நாடு பேச்சுகளை நடத்தியிருக்கின்றது. ஆனால், அதனைவிட தற்போதைய நிலைமை முற்றுமுழுதாக வேறுபட்டதாகும். கடந்த காலங்களில் நாம் அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்ற வகையில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். அத்தகைய சூழ்நிலையில், இரு தரப்பினரும் நீடிக்கப்பட்ட கடன் வசதியில் உடன்பாட்டை எட்டவேண்டும். இது ஒரு நேர்கோட்டில் நகர்வதைப போன்றது.

ஆனால், இப்போது நிலைமை வேறு. நாங்கள் இப்போது வங்குரோத்து நாடாக பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறோம். எனவே, முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை விட கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலையை நாங்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அதிகாரிகள் மட்டத்திலான உடன்பாடு எட்டப்பட்டவுடன், இது சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். ஆனால், நமது நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதால், நமது கடன் நிலைத்தன்மை குறித்த திட்டத்தை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும். அந்தத் திட்டத்தில் அவர்கள் திருப்தியடைந்தால்தான் அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு எட்ட முடியும். இது ஒரு நேரடியான செயல்முறை அல்ல.

இந்த சிரமங்களுக்கு மத்தியிலும் விவாதத்தை திறம்பட முடிக்க முடிந்தது. ஐ.எம்.எவ்.இன் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, "ஆதரவான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து நேர்மறையான மற்றும் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடத்தப்பட்டன. குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டது."

அதன்படி, தற்போது நாங்கள் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிலைத்தன்மை குறித்த திட்டத்தை முன்வைக்க வேண்டும், இது நிதி மற்றும் சட்ட வல்லுநர்களான லாசார்ட் மற்றும் கிளிஃபோர்ட் சான்ஸ் ஆகியோரால் தயாரிக்கப்படுகிறது. ஓகஸ்ட் மாதத்திற்குள் இந்த அறிக்கை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்கப்படும். அதன்பின்னர், நாங்கள் ஓர் உடன்பாட்டை எட்ட முடியும். பின்னர், அது ஐ.எம்.எவ்.இன் பணிப்பாளர் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அனுமதிக்குப் பின்னர், 4 ஆண்டுகளுக்கு ஒரு விரிவான கடன் உதவித் திட்டம் தயாரிக்கப்படும். அந்த பாதையிலேயே நாங்கள் பணிக்கின்றோம்.

அதிகாரிகள் மட்டத்திலான அனுமதி கிடைக்கபெற்றதன் பின்னர், இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற கடன் உதவி வழங்கும் நட்பு நாடுகளை ஒன்றிணைத்து நன்கொடையாளர் உதவி மாநாட்டை ஏற்பாடுசெய்வோம். பொதுவான உடன்படிக்கையின் மூலம் கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முறையை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் எரிபொருள் நெருக்கடியே முதன்மையாகும். மேலும், உணவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் மற்றும் உணவு போன்ற விடயத்தில் எங்களுடைய நாடு ஒரு கட்டத்தில் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எரிபொருள் பற்றாக்குறையாக இருந்ததுடன், உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்தன.

ஆனால், அண்மையில் ஏற்பட்ட உலக நெருக்கடிகளால் இந்நிலை மேலும் தீவிரமடைந்து. பானையிலிருந்து நாங்கள் அடுப்பில் விழுந்தோம். உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக எங்கள் பிரச்சினை மேலும் உக்கிரமடைந்தது. தற்போதைய நெருக்கடிக்கப்பால் ஒரு சர்வதேச நெருக்கடியும் எங்கள் மேல் வீழ்ந்துள்ளது. இந்த நிலைமையால் நாங்கள் மட்டுமல்லாது, வேறு நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவும் இந்தோனேசியாவும் பாதிக்கப்படுகின்றன. எனவே, எங்களுக்கு வழங்கிய கடன் உதவியை இந்தியா மட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

இந்த பாதிப்பால் வளர்ந்த நாடுகளுக்கும், வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஒரு நாட்டிற்குள்ளேயே மேல் வர்க்கத்தினருக்கும் கீழ்மட்ட வர்க்கத்தினருக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கலாம் என்றும் எச்சரிக்கிறார். உலக நெருக்கடியிலிருந்து எந்தவொரு நாடும் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளமுடியாது. இதனை நாங்கள் அனைவரும் எதிர்கொள்ள வேண்டும்.

எங்களை எதிர்கொள்ளும் அனைத்து உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களையும் கருத்திற்கொண்டே எங்களுடைய திட்டங்களை வகுத்துள்ளோம். நாங்கள் வழிகளை மாற்றி பழைய முறையில் இருக்க முடியும். அவ்வாறிருந்தால், முழு நாடும் சிதைந்துவிடும். எனவே, இந்தப் பாதையில் முன்னேற நாங்கள் பாடுபடவேண்டும். இது இலகுவான பயணம் அல்ல. இது கடினமான மற்றும் கசப்பான பயணமாக இருக்கும். ஆனால், இந்தப் பயணத்தின் முடிவில் நமக்கு நிம்மதி கிடைக்கும். முன்னேற்றத்தையும் அடைய முடியும்.

நமது பொருளாதாரம் தற்போது சுருங்கி வருகிறது. நாங்கள் அதை மாற்ற முயற்சிக்கிறோம். மத்திய வங்கி புள்ளிவிவரங்களின்படி, எங்களுடைய தற்போதைய பொருளாதார வளர்ச்சி விகிதம் - 4 மற்றும் - 5இற்கு இடையேயுள்ளது. ஐ.எம்.எவ். புள்ளிவிவரங்களின்படி, - 6 மற்றும் - 7இற்கு இடையேயுள்ளது. இது மோசமான நிலைமையாகும். நாங்கள் இந்தத் திட்டங்களில் பயணித்தால் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் -1 ஆக பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்ட முடியும். 2025ஆம் ஆண்டுக்குள், பட்ஜெட்டில் தன்னிறைவை உருவாக்குவதே எங்கள் நோக்கம். பொருளாதார வளர்ச்சி விகிதத்தை நிலையான நிலைக்கு உயர்த்துவோம். 2026ஆம் ஆண்டளவில் நிலையான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்துவதே எங்கள் இலக்காகும்.

இந்த ஆண்டு ஜூன்முதல் டிசம்பர்வரை 3,489 மில்லியன் டொலர், 2023இல் 5,862 மில்லியன் டொலர், 2024இல் 4,916 மில்லியன் டொலர், 2025இல் 6,287 மில்லியன் டொலர், 2026இல் 4,030 மில்லியன் டொலர், 2027இல் 4,381 மில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டியுள்ளது. 2021ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்கத்தின் மொத்தக் கடன் சுமை 17,589 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2022 மார்ச்சில் அது 21,989 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இதேவேளை, உற்பத்தி 25 வீதம் குறைந்துள்ளதாயின், உற்பத்தி வருமானமும் 25 வீதம் குறையும். இதனால், தனியார் வருமானம் வீழ்ச்சியடைவதுடன், வேலையின்மையும் அதிகரிக்கும். இந்த நிலைமையே ஏற்பட்டுள்ளது. அனைத்து துறைகளையும் வளர்ச்சியை நோக்கி முன்னேற்றினாலேயே எங்களுடைய இலக்கை அடைய முடியும்.

மேலும், கடந்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் காணப்பட்ட பல பிரச்சினைகளின் விளைவுகளில் தற்போது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவை இரண்டு, மூன்று நாட்களில் தீரும் பிரச்சினைகள் அல்ல. பல ஆண்டுகளாக நம் நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் சில பாரம்பரிய சிந்தனைகளின் விளைவுகளால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே, 2023ஆம் ஆண்டிலும் நாம் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்பதே உண்மை. இதுவே யதார்த்தம். மக்களுக்கு பொய்யான பிம்பத்தைக் காட்டி இந்த யதார்த்தத்தை மறைக்க சிலர் முயற்சிக்கலாம். ஆனால், அவை அழகான வசனங்கள் என்பது காலப்போக்கில் உறுதிப்படுத்தப்படும். அழகான வசனங்களினால் எங்களால் உயிர் வாழ முடியாது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் பணவீக்கம் 60 வீதமாக உயரும். உலகில் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகும். தற்போதைய பணவீக்கம் மற்றும் ரூபா பெறுமதியின் வீழ்ச்சியால், ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலுள்ள பணத்தின் மதிப்பு 50 வீதமாக குறைந்துள்ளதுடன், ஓய்வூதியத்தின் உண்மையான மதிப்பும் 50 வீதமாகக் குறைந்துள்ளது.

இதனால், மூத்த குடிமக்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள். இவர்கள் அனைவரிடத்திலும் ஏழ்மை பரவி வருகிறது. அவர்கள் பெறும் பணத்தின் மதிப்பு 50 வீதமாகக் குறைந்துள்ளது. அவர்கள் விலைக்கு கொள்வனவுசெய்யும் திறனும் 50 வீதமாகக் குறைந்துள்ளது. கனவு உலகத்தை உருவாக்குவது இலகு. ஆனால், இந்த பிரச்சினைகளுக்கு விடை காண்பது கடினமாகும்.

கூடிய விரைவில் ரூபாவை நிலைப்படுத்துதல், வீழ்ச்சியடையவிடாமல் ரூபாவை வலுப்படுத்துதலே இதற்கான தீர்வாகும். அந்த நோக்கத்திற்காக எதிர்காலத்தில் பணம் அச்சிடுவதை மட்டுப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். 2023இல், பல சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடுகளுடன் பணத்தை அச்சிட வேண்டியிருக்கும். ஆனால், 2024இல் ஆண்டு இறுதிக்குள், பணம் அச்சிடுவதை முற்றிலுமாக நிறுத்தவே எதிர்பார்த்துள்ளோம். 2025ஆம் ஆண்டுக்குள் பணவீக்க விகிதத்தை 4 முதல் 6 சதவீதம் வரை குறைக்க இலக்கு வைத்துள்ளோம்.

வங்கி மற்றும் நிதி அமைப்பைப் பாதுகாப்பதே எங்களுக்கு மற்றொரு முதன்மை செயற்பாடாகும். பொருளாதார நெருக்கடியின்போது இந்த அமைப்புகளின் மீதான அழுத்தத்தை விளக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால், இந்த அழுத்தம் காரணமாக வங்கி அமைப்புக்கு அழுத்தம் கொடுப்பதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். வங்கி மற்றும் நிதி அமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

இதற்கிடையில், அரச வங்கிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளோம். பொருளாதார நெருக்கடி மற்றும் அரச நிறுவனங்களுக்கு அவர்கள் கொடுத்த பெருந்தொகை கடன் போன்ற இரு தரப்பிலும் இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 2021ஆம் ஆண்டுவரை, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் 541 பில்லியன் ரூபாவும் 2022ஆம் ஆண்டு மின்சார சபை 418 பில்லியன் ரூபாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆயிரத்து 460 பில்லியன் ரூபாவும் கடனாகும்.

பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து நஷ்டத்தை சந்திக்கும்போது, ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுகின்றனர். வாழ்நாளில் இதுவரை விமானத்தில் பயணிக்காதவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நட்டத்தால் பாதிக்கப்படுகின்றனர். வாழ்நாள் முழுவதும் பணம் கொடுத்து எரிபொருளை பெற்றுக்கொண்ட மக்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பல மணிநேரம் மற்றும் நாட்களாக வரிசையில் காத்திருந்து எரிபொருளைப் பெற்றுக் கொண்டு, நிறுவனத்தின் நஷ்டத்தை ஈடுகட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இழப்பீடு செலுத்துகின்றனர். வாழ்நாள் முழுவதும் பணம் கொடுத்து மின்சாரம் பெறும் மக்கள், தினமும் பல மணிநேரம் இருளிலிருந்து மின்சார சபையின் நட்டத்துக்காக பாடுபடுகின்றனர்.

மக்கள் படும் துன்பங்கள், துன்புறுத்தல்கள், தொல்லைகள் மற்றும் நிறுவனங்களின் இழப்புகளுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளை மறைப்பதற்கு நீண்டகாலமாக சாக்குப்போக்கு பயன்படுத்தப்படுகிறது. மக்களின் வளங்கள், சொத்துகள் என அந்தந்த நிறுவனங்களின் தோல்வியும் மறைக்கப்படுகிறது. இவை மக்களின் சொத்துகளாகவும் மக்களின் வளங்களாகவும் இருந்தால், மக்களுக்கு நிவாரணம், வசதி, இலாபம் ஆகியவற்றை வழங்கவேண்டும். ஆனால், இந்த நிறுவனங்களால் மக்கள் துன்பங்கள், தொல்லைகள் மற்றும் இழப்புகளை மாத்திரமே அனுபவிக்கின்றனர்.

எனவே, நாட்டுக்கும் மக்களுக்கும் சுமையாக மாறியுள்ள இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் நாம் புதிதாக சிந்திக்கவேண்டும். 30, 40 வருடங்களாக மக்கள் மீது சுமையை ஏற்றுவது நியாயமானதா? தொடர்ந்து மக்கள் மீது சுமையை ஏற்றி இந்த நிறுவனங்களை நடத்த வேண்டுமா? இந்த நிறுவனங்கள் வழங்கும் சேவைகளை ஏன் மக்களுக்குச் சுமையின்றி வழங்க முடியாது? இந்த சேவைகளை வழங்க வேறு வழிகள் இல்லையா? இந்த கருத்துகளை கருத்திற்கொண்டு, இந்த நிறுவனங்களை மறுசீரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுப்போம். அவை நாட்டுக்கு சுமை ஏற்படாத வகையில் நடத்திச் செல்லவும் உறுதிசெய்வோம்.

உணவுப் பற்றாக்குறையின்றி கிடைப்பதற்கும், உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் பின்னணியையும் உருவாக்க வேண்டும். உணவு கிடைப்பதை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அடுத்த பருவத்தின் வெற்றிகரமான அறுவடைக்கு தேவையான பின்னணியை நாங்கள் உருவாக்கி வருகின்றோம். இரசாயன உரங்களை தட்டுப்பாடு இல்லாமல் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. விதைகள் மற்றும் உள்ளீட்டு பொருட்களுக்கான ஒதுக்கீடுகள் இடைக்கால பட்ஜெட் மூலம் ஒதுக்கப்படுகின்றன.

மேலும், உலக உணவுத் திட்டம் மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து உணவு கிடைப்பதை அதிகரிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இந்தப் பிரதிநிதிகள் குழு இலங்கையின் உணவு நெருக்கடி குறித்து ஆய்வுசெய்து வருகிறது. எனது அழைப்பின்பேரில் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைவர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

எந்தளவு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தாலும், உணவு விடயத்தில் சமூகத்தின் ஏழை மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை மறக்க முடியாது. வரவுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் சமூகத்தின் கீழ்மட்ட வர்க்கத்தினருக்கு குறுகியகால நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கப்படும். சமூக நலச் சலுகைகள் சட்டத்தின் கீழ் இந்த நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படும்.

உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் நாங்கள் நடைமுறைப்படுத்துவோம். இந்த நடவடிக்கைகளுக்கு இணையாக, பருவங்களுக்குத் தேவையான ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாய அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய அமைச்சுகளுடன் இணைந்து பிரதமர் அலுவலகத்தின் தலையீட்டுடன் நாடளாவிய ரீதியில் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்துக்கான கண்காணிப்புகளையும் முன்னெடுக்கின்றோம். அடுத்த 6 -7 மாதங்களில் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஏற்றுமதி பொருளாதாரத்தை உயர்த்த பல கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்கவுள்ளோம்.

இந்த திட்டமிட்ட பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால், 2025ஆம் ஆண்டுக்குள் மீண்டும் 2019ஆம் ஆண்டில் இருந்த நிலைமையை அடையலாம். அங்கும் இந்தப் பயணத்தை நிறுத்த முடியாது. புதிய பொருளாதாரத்தை உருவாக்கும் வரை இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் இந்த முன்னேற்றத்திற்குத் தேவையான பின்னணியை தயார்படுத்துவோம்.

நான் பிரதமராக பொறுப்பேற்றதும், இந்த கடினமான மற்றும் நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயல்பட முன்வருமாறு எதிர்க்கட்சிகளிடம் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுத்தேன். ஆனால், அதற்காக கிடைத்த பதில் அனைவருக்கும் தெரியும். அந்த ஒற்றுமையின் முக்கியத்துவம், இக்கட்டான காலத்திலிருந்து வெளியேற வேண்டியதன் முக்கியத்துவத்தை, நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இந்தச் சவாலை முறியடிக்க இச்சபையிலுள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒன்றிணையுமாறு மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன்.

மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த சமூக சந்தைப் பொருளாதாரத்தை உருவாக்குவதே எங்களின் இலக்காகும். சீனா, வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து இதற்கான பாடங்களை எடுத்துக்கொள்ள முடியும். இவை போட்டித்தன்மை வாய்ந்த சோஷலிச சந்தைப் பொருளாதாரங்களை வெற்றிகரமாகப் பராமரிக்கும் நாடுகளாக உள்ளன.

எங்களுடைய இலக்குகளை அடைய குறுக்குவழிகள் எதுவும் இல்லை. மந்திரமோ, பரிகாரமோ இல்லை. கலாநிதி ஹரிணி அமரசூரிய எம்.பியும் இதனை சுட்டிக்காட்டினார். எங்களுக்கு ஒரு காலி பானை கிடைக்கிறது. இது எளிதானதல்ல, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாம் தீர்க்கப்படும் என்று நாங்கள் நினைக்கவில்லை. ஆட்சிக்கு வந்ததால் மாத்திரம் எல்லாம் தீர்க்கப்படாது. செய்யவேண்டிய பல விடயங்கள் உள்ளன. இவற்றை சரிசெய்வதற்கு காலம் எடுக்கும். இது எம் அனைவருக்கும் கடினமான காலமாக இருக்கும். நாங்கள் அனைவரும் அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும். மிகவும் கடினமாக உழைக்க வேண்டும். அவர் கூறியதுபோன்று, இந்த நெருக்கடியானது சில நாட்களில் அல்லது சில மாதங்களில் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல. இன்னும் தீவிரமானது. ஆனால், நாங்கள் முன்வைத்த திட்டத்தை விட பயனுள்ள திட்டம் இருந்தால், வேகமான திட்டம் இருந்தால், அதை முன்வையுங்கள். அதை விவாதிக்கலாம். அது மிகவும் பயனுள்ள பாதை என்றால் அதை நடைமுறைப்படுத்துவோம்.

நாட்டை எங்களிடம் ஒப்படைத்தால் ஆறு மாதங்களில் நாட்டை மீட்டெடுப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். உண்மையில், அவ்வாறு செய்ய முடிந்தால் அது மிகவும் நல்ல விடயமாகும். பொருளாதார வளர்ச்சி -6 முதல் -7 ஆக சரிந்த ஒரு நாட்டை ஆறு மாதங்களில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்திற்குக் கொண்டுசெல்வது உலகில் எந்த நாட்டிலும் நடக்காத செயலாகும். ஆனால், இதுவரை அவ்வாறு நடக்கவில்லை எனக்கூறி, அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்தை நிராகரிக்க முடியாது. ஆறு மாதங்களுக்குள் நாட்டை மீட்டெடுக்கும் திட்டம் அவரிடம் இருந்தால் நன்று. அத்தகைய திட்டத்தால், குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். அதுமட்டுமன்றி உலகிற்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகவும் அமையும்.

எனவே, அந்தத் திட்டத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் ஜனாதிபதியிடம் முன்வைக்க விரும்பவில்லை என்றால் அதனை இந்த நாடாளுமன்றத்தில் முன்வையுங்கள். அதை இந்த நாடாளுமன்றத்தில் விவாதிப்போம். அந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தும் திட்டத்தை விட சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருந்தால் அதைச் செயல்படுத்துவோம். அத்தகைய திட்டம் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை வெல்லும் அளவுக்கு சிறப்பானதாக இருக்கும். அவ்வாறான திட்டம் இருந்தால் அவருக்கு இடமளித்து நான் பதவி விலகத் தயாராகவுள்ளேன்.

அநுரகுமார திஸாநாயக்கவின் திட்டம் வெற்றியளித்தால் நான் மட்டுமல்ல, இந்த அமைச்சர்களும் பதவி விலகி, அவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

**க**ரும்புலிகள் நினைவேந்தலையொட்டி வடக்கு, கிழக்கு அல்லது தென்னிலங்கையில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறலாமென எச்சரித்து, பாதுகாப்புச் செயலாளருக்கு பொலிஸ் மா அதிபர் சொல்லப்படும் கடிதம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தின் பிரகாரம் கரும்புலிகளின் நினைவேந்தல் நிகழ்வுகளை இலக்குவைத்து இந்த குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளதாக சர்வதேச உளவு நிறுவனங்களின் பங்களிப்புடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு நிழ்வுகளிலும் பங்குபற்ற வேண்டாமென வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை இந்த ஆவணம் எச்சரித்துள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தகவல்கள் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும், அப்படி தாக்குதல் நடத்த வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தற்போது நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களையும் உணர்வுகளையும் நசுக்கவே இவ்வாறான செய்திகள் பகிரப்படுவதாக சந்தேகம் இருப்பதாகவும் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கரும்புலிகளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 05 ஆம் திகதி சிறப்பு நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் தற்கொலைப் போராளியான மில்லர் தற்கொலை தாக்குதல் நடத்திய நாளாகவும் இந்த நாள் கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் ஈழத்தமிழர்கள் இந்த நினைவுநாளை அனுஷ்டித்து வருகிறார்கள்.

இந்நிலையில், பொலிஸ் மா அதிபரால் பாதுகாப்புச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நிலையில், இவ்வாறானதொரு எச்சரிக்கை எதற்காக என்ற கேள்வி எழுகிறது.

‘புலி’ என்ற சொல், இந்த நாட்டின் அரசியலை தீர்மானிக்கும் மிக முக்கியமானதொன்றாக மாறியிருந்தது. குறிப்பாக, ராஜபக்ஷக்களின் ஆட்சி, புலிகளை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது.

ராஜபக்ஷக்கள் தோல்வியுற்றபோது, தென்னிலங்கை சிங்கள மக்களின் உணர்ச்சிகளை எழுப்பும் வகையில் புலிகளுக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றபோதும், நாட்டின் பாதுகாப்புக்கு ராஜபக்ஷக்களின் ஆட்சியே பொருத்தமானதாகும் என்றவாறான கருத்தாடல்கள் தென்னிலங்கையில் மிகப் பரவலாக பேசப்பட்டன.

ராஜபக்ஷக்கள் புலிகளைத் தோற்கடித்துவிட்டார்கள் என்பதற்காகவே எந்த அர்ப்பணிப்பையும் செய்யத் தயார் என தென்னிலங்கை மக்கள் நினைக்கும் அளவுக்கு அவர்களின் மனம் மாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது தோல்வியுற்று, மக்களின் எதிர்ப்புக்கு ஆளாகி, நலிவுற்றிருக்கும் ராஜபக்ஷக்களுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்கும் நோக்கிலா பாதுகாப்பு தொடர்பான கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றன என்ற சந்தேகம் இயல்பாகவே எழுகிறது.

ஏனென்றால், ராஜபக்ஷக்களுக்கு புலிகள் என்ற பதத்தை உபயோகித்து அரசியல் செய்வதைத் தவிர வேறொரு தெரிவு கிடையாது. அதைக்கொண்டே காலம் முழுவதும் இலங்கையில் ராஜாவாக வாழலாம் என்ற கனவு தற்போதைய சூழ்நிலையில் ஏற்புடையதாகாதல்லவா? மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை.

சிங்கள தேசத்தின் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிராகவே தமிழ் மக்கள் போராடினார்கள். அப்போது உயிரிழந்த தமது சொந்தங்களை நினைவுகூரும் முகமாக ஒவ்வொரு வருடமும் சிறப்பு தினத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

அதனை பொருட்டாகப் பயன்படுத்தி, புலிகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து இதோ தேசத்துக்கு மற்றுமொரு ஆபத்து என்ற தோரணையில் சிங்கள் மக்களிடத்தில் செய்தியொன்று சொல்வதற்கு முற்படுவார்களாயின் அது தோல்வியிலேயே முடிவடையும்.

ராஜபக்ஷக்கள் யார், அதிகார ஆசைக்காக அவர்கள் என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் தற்போது நன்றாக உணர்ந்துள்ளார்கள். ஆதலால், இந்தப் பூச்சாண்டி வேலைகள் எதற்கும் உதவ மாட்டா என்பதை அவர்களுக்குச் சொல்லிப் புரியவைக்க வேண்டிய அவசியம் கிடையாது.

இப்போதும் திருந்தாவிட்டால், இனி மக்கள் பதில் சொல்வார்கள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூலை 06ஆம் திகதி, புதன்கிழமை

# எடுபடாது புலிப் பூச்சாண்டி!



# உலகம் போற்றும் தொன்மையும் பெருமையும் மிக்க திருக்கேதீச்சரம்

**திருக்கேதீச்சர ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று**

**க**ம்பர் இராமாயணத்தில் இலங்கையை “பொன் கொண்டு இழைத்த பூமி” என்று வர்ணிக்கின்றார். இலங்கை சிவபூமி என்பது திருமூல நாயனாரின் கருத்தாகும்.

**மேரு நடுநாடிமிக்கிடை பிங்கலை**
**கூருமிவ் வானின் இலங்கை குறியுறுஞ்**
**சாரும் திலைவனத்துதண்மா**
**மலையத்தூடு**
**ஏறுஞ் சுழுமுனை இவைசிவ பூமியே**
**(2701)**

மேற்குறித்தவாறு இலங்கைக்கும், பாரத நாட்டின் மேருமலைக்கும் இடைப்பட்ட பூமி பிரதேசம் முழுவதையும் ‘சிவபூமி’ என்று இன்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலநாயனார் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். இலங்கையையும், மேருமலையையும் இணைத்துச்செல்லும் நடுக்கோடு தில்லைச்சிற்றம்பலத்துக்கும், பொதிமலைக்கூடாகவும் செல்கின்றது. இதனாலேயே மேருவுக்கும், இலங்கைக்கும் இடைப்பட்ட பூமியை சிவபூமி என்றார் திருமூலர். இலங்கையின் திருக்கோணேஸ்வரம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் சிவஸ்தலமாக விளங்கி வருவதுபோல், தெற்கே மாத்தறை தேவேந்திரமுனைக்கு தென்பால் தொண்டீஸ்வரம் என்னும் சிவ ஸ்தலம் விளங்கிற்று.

இலங்கை, தொண்டீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் என பஞ்சசிவ ஈஸ்வரங்களைக்கொண்ட திவ்விய பூமியாகும். இலங்கைக்கூடாக விராட்புருடனின் நாடி செல்வதாக ஞானிகள் இயம்பியுள்ளார்கள்.

சிவபெருமானை ‘ஈஸ்வரதெய்யோ’ என தென்னிலங்கைவாசிகளும் வணங்குகின்றனர்.

ஈஸ்வரனை வட இலங்கையில் சிறப்பாகவும், தென்னிலங்கையில் பொதுவாகவும் வழிபாடு செய்கின்றனர். தென்னிலங்கையில் ஈஸ்வரங்கள் மலிந்திருந்தன என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. சிங்கள மன்னர்களில் பலர் சிவநெறியை சிந்தையிற்கொண்டு, அரசு செய்ததோடு தமக்கு சிவன் என்ற பெயரையும் மூத்த சிவன் என்ற பெயர்களால் வரலாறு வழங்குகின்றது.

ஈஸ்வரன் என்பது சிவன். சிவனைப் பற்றிக்கூறுவது சைவம். இலங்கையை ஆண்ட இராவணன் ஈஸ்வர பக்தியுள்ளவன். இராவணனின் சிவபக்தியை தேவார திருமுறைகளும், அவன் தேவி மண்டோதரியின் சிவபக்தியைத் திருவாசக திருமுறையும் புகழ்ந்து பாடுகின்றன. அண்மையில் எங்கள் மத்தியில் ஒளிவிளக்காகத் திகழ்ந்த சிவயோக சுவாமிகளும், ஈழம் சிவப்பொலிவு பெற்ற நாடென வாழ்த்தியுள்ளார். புறநானூற்றில் கடவுள் வாழ்த்தாக வரும் பாடல் “கண்ணி கார் நறும்” எனத் தொடங்குகிறது. அப்பாடல் சிவபெருமான் அணிந்தருளும் கொன்றை மாலை, ஊர்தியாகக் கொள்ளும் வெள்ளேறு - இடபம் அவர்தம் நஞ்சுண்ட கருத்த கண்டம், அக்கண்டத்தை வேதம் வல்ல அந்தணர் புகழ்ந்து பாடுதல். உமாதேவியாரை இடபமாகக்கொள்ளல். நெற்றியில் அணிந்த இளம் பிறை, அது பதினென் கனைத்தினராலே புகழப்படுதல், எல்லாவுயிர்களுக்குங் காப்பளிக்குங் கங்கை சூடிய செஞ்சடை பற்றியெல்லாம் புகழ்ந்து பாடுவதாய் அமைந்துள்ளது.

**“நான்மறை முகநூல் முக்கட் செல்வன் ஆலமுற்றம். ”**

சிறுபாணாற்றுப்படையில் ‘ஆலமர் செல்வன்’ என வருவதும் நோக்கத்தக்கதே. சிவனுக்கு உரிய ஆயுதம் சூலம் என்பதை “சூலம் பிடித்த சுடர்படைக் காலக்கடவுள்” என்ற பதிற்றுப்பத்து பாடலடி எடுத்துக் காட்டும். “உமையொரு பாகத்தன்” என்பதை ‘ஒரு குழை ஒருவன்’ என்று கலித்தொகை குறிப்பாகச் சுட்டுகின்றது. ‘சிவனுக்குரிய கொடி’. ‘ஆனேற்றுக் கொடி’ எனவுங் கூறுகிறது. இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது சங்க காலத்திலேயே சிவபெருமானுக்குரிய திருவுருவ அமைப்புப் பற்றிய புராணச் செய்திகள் நிலவியுள்ளன என்பதும் அச்செய்திகளின் அடிப்படையிலேயே அக்கால சிவனை வழிபட்டனர் என்பதும் பெறப்படுகின்றன.

மதுரைக் காஞ்சியில் பஞ்சபூதங்களையும் ஆக்கியளித்தோனும் சிவபெருமானே என்ற கருத்தும் தரப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றைக் கூறும் பெரும்பான்மை இனத்தவரின் மகாவம்சம் கூறும் செய்திகள், விஜயன் காலத்திற்கு முன்னே ஈழத்தில் சிவாலய வழிபாடு இருந்தமைக்கு பல எடுத்துக்காட்டுகளை உள்ளடக்கியுள்ளமை நோக்கத்தக்கது. ஹேமமாலனி என்ற பெண்மணி புத்தரின் புனித தந்தத்தை தன் சிரசில் மறைத்துக்கொண்டு மன்னாரில் வந்திறங்கியதாகவும், அப்பெண்மணி அன்றிரவு மாதோட்டத்தில் வாழ்ந்த ஓர் அந்தணர் இல்லத்தில் தங்கியதாகவும் மகாவம்ச செய்தியில் அறியக்கூடியதாகவுள்ளது.

உலகிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயங்களில் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதர் ஆலயம் தலைசிறந்ததாகும். இவ்வாலயம் பாடல் பெற்ற தலமாகும்.

திருஞானசம்பந்தர், சுந்தரர் உட்பட சேக்கிழாரின் பெரியபுராணத்திலும் இவ்வாலயச் சிறப்பினை பாடலாக பாடியிருப்பதை அறிகின்றோம்.

சோழ, பாண்டிய மன்னர்கள் உட்பட இலங்கையின் கடைசித் தமிழ்மன்னன் சங்கிலியன்வரை இவ்வாலயத்திற்கு திருப்பணிகள் செய்துள்ளார்கள்.

கி.பி.1505இல் காலியில் வந்திறங்கிய போர்த்துக்கேயர் பின்னர், பெரும் வணிகத்துறையாகவும், பட்டிணமாகவும் விளங்கிய மாதோட்டத்திற்கும் வந்து பிரம்மாண்டமான திருக்கோயிலாக விளங்கிய திருக்கேதீச்சர சிவாலயத்தைப் பார்த்து அதிசயித்து வியந்தது மட்டுமல்ல, அவ்வாலயத்திலிருந்த விக்கிரகங்கள், இரத்தினங்கள், பொன், பவளங்கள், பொருள் ஆபரணங்களையெல்லாம் கொள்ளையடித்ததுடன், ஆலயத்தையும் இடித்து தரைமட்டமாக்கினர்.

இப்பெரும் கோயில் மண்ணுள் புதைந்து, காடுகள் அடர்ந்து, தன்பொலிவை இழந்து, கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து போனது. இப்பகுதியில் பல வருடங்களின் பின்னர் விவசாயம் செய்ய முனைந்த விவசாயிகளின் கலப்பையில் சில விக்கிரகங்கள் கிடைக்கப்பெற்றன. சைவமக்கள் முந்நூறு வருடங்களுக்கு மேலாக மனதில் வைத்து பூஜித்த ஆலயத்தை மீண்டும் பெற வழிபிறந்தது.

இச்செய்தியை அறிந்த நல்லைநகர் ஆறுமுகநாவலர் பெருமான், கல்லுக் குவியலாகவும், மணல், மண்மேடையாகவும் புதர் மண்டிக்கிடந்த இவ்விடம்தான் மாதோட்டம் என்ற வாணிபத்துறைக்கருகில் அமைந்திருந்த திருக்கேதீச்சரமே என்பதை உணர்ந்து, முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நாம் இழந்த பழைமையும் பெருமையுமிக்க திருக்கேதீச்சரம் ஆலயம் என அறிந்து “சைவ மக்களே தேன்பொந்து ஒன்று கிடைத்து விட்டது. அதைக் காப்பாற்ற புறப்படுங்கள்” என்று சைவ மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். அப்போது அரசாங்க அதிபராக இருந்த துவையினர் துரையிடம் கோயிலையும் காணியையும் சைவ மக்களிடம் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நாவலர் இறைவனடி சேர்ந்த பின்னர் அவருடைய எண்ணம் நிறைவேறியது. சைவமக்கள் 46 ஏக்கர் நிலத்தை பிரித்தானிய அரசிடம் இருந்து ஏலத்தில் வாங்கி நாட்டுக்கோட்டை நகரத்தாரின் உதவியோடும் காரைக்குடி வம்சத்தாரின் அனுசரணையோடும் நிலத்தை கோயில் சொத்தாக்கினர். பின்னர் யாழ்ப்பாணத்து சைவமக்களும் இலங்கை சைவமக்களும் மலேசியா உட்பட்ட நாட்டவர்களும் கொடுத்த நிதி இவர்களுடைய பணிகளுக்கு ஊக்கமளிப்பதாக விளங்கியது.

பின்னர் 1894ஆம் ஆண்டு நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் பயனாக இவ்வாலயம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாலயத்தின் இடப்பரப்பை சைவமக்கள் மீண்டும் பெறும் வகையில் நாவலரின் கனவை நனவாக்க அப்புக்காந்து நாகலிங்கம், பசுபதி செட்டியார் முதலானோர் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் சைவமக்களிடம் நிதித் திரட்டி நாற்பத்தாறு ஏக்கர் நிலத்தை மீட்டெடுத்தனர். கொழும்பு நகரத்தார் எனப்படும் வர்த்தகப் பெருமக்களும், பழனியப்பன் செட்டியார் உட்பட யாழ்ப்பாண சைவமக்களும் இத்திருப்பணிக்கெல்லாம் துணைநின்று பெரும் தொண்டாற்றினர்.

இத்திருப்பணிகளைத் தொடர்ந்து 1903.06.28 முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றதாக அறியக்கிடைக்கின்றது. இவ்வாலய பரிபாலனத்திற்காக கொழும்பில் திருப்பணிச் சபை அமைக்கப்பட்டது. அதன் அயரா முயற்சியினாலும், தன்னலமற்ற சேவையினாலும் இவ்வாலயம் பரிணாம வளர்ச்சிகண்டு சிறப்புற்று விளங்க பல கும்பாபிஷேகங்கள் காலத்துக்குக் காலம் நடைபெற்றன.

இவ்வாலயத்தில் தற்போது நடைபெற்று வரும் திருப்பணியில் இந்திய அரசின் பங்கும், பணியும் மகத்தானவை. முழுக்க முழுக்க கற்கோயிலாகவும், கலைப் பொக்கிஷமாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆலயத்திற்கான கற்தூண்கள் வரலாற்றையும், சிற்பக்கலையின் சிறப்பையும் உணர்த்தும்வண்ணம் இந்தியாவில் வடிவமைத்து பொலியப்பட்டு, அவை கப்பலில் ஏற்றிக் கொண்டு இங்கு கொண்டுவந்து ஆலயத்தில் அமைத்துள்ளார்கள். இலங்கைக்கும் இந்தியாவுக்குமான கலாசார உறவுகள் தொன்மையானவை. இந்திய அரசினால் 310 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற கணபதி ஸ்தபதியும் அவரது பிள்ளைகளும் இப்பணியில் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றியுள்ளனர். மாமல்லபுரத்திலிருந்து அழைத்துவரப்பட்ட சிற்பிகளும் இலங்கை சிற்பிகளும் இணைந்து தம் கைவண்ணத்தை காட்டியுள்ளார்கள். கல்லிலே கலைவண்ணத்தை வடித்து நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றனர்.

ஆலயத்தின் கருவறை விமானமும், ஏனைய சந்நிதிகளின் விமானங்களும் தனிக்கருங்கல்லினால் அமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். உட்பிரவாகமும் கருங்கல்லினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத் திருப்பணியில் காலத்திற்குக் காலம் பல சைவத்தொண்டர்களும், மெய்யடியார்களும் பங்குபற்றி திருப்பணிச் சபைக்கூடாக சேவையாற்றுகின்றனர். இவர்களில் பழனியப்பச் செட்டியார், பெரியார் நமசிவாயம், கைலாசபிள்ளை, கந்தையா நீலகண்டன், சோமசுந்தரம், சிவபாதசுந்தரம், கைலாசபிள்ளை, ஆறு திருமுகன், தற்போதைய திருப்பணிச் சபையின் தலைவர் செல்வரத்தினம் இராகவன், இணைச் செயலாளர் சிவசம்பு இராமகிருஷ்ணன் உட்பட பல சமயப் பெரியார்கள் அருஞ்சேவையாற்றியுள்ளனர்.


இன்று இக்கோயிலின் பரிவாரக்கோயில் உட்பட சகலதும் தனிப்பெரும் கற்கோயிலாக விளங்குகின்றது. இந்திய சிவாலயங்களுக்கு நிகராக இவ்வாலயம் தனிப்பெரும் கற்கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. ஆதிலிங்கம் உட்பட மகாலட்சுமி, முருகப்பெருமான், கௌரீஸ்வரி அம்பாள் ஆகியோரின் சந்நிதிகளும், சந்நிதிகளின் விமானமும் தனிக்கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளதுடன், முற்றுமுழுக்க கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபம், மகா மண்டபம் உட்பட இந்திய அரசாங்கத்தின் 310 மில்லியன்களுக்கும் அதிகமான செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்திற்காக நம் நாட்டு சிவாச்சாரியார்களுடன், இந்திய வேத விற்பன்னர்களும் வரவழைக்கப்பட்டு தற்போது யந்திர பூஜை நடைபெறுகின்றது.

ஓதுவார்களும், சமயப்பெரியார்களும் ஓதும் பண்ணிசை, வேத பாராயணம், சமய சொற்பொழிவு முதலான நிகழ்வுகளையும் கிரியைகளையும் ‘ஓம்’ தொலைக்காட்சி உட்பட நம் நாட்டிலுள்ள பல ஊடகங்களும், தமிழக ஊடகங்களும், பத்திரிகைகளும் மக்களை சென்றடையச் செய்கின்றன.

சுபகிருது வருடம் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையான உத்தர நட்சத்திரம் சிம்மலக்கின நன்முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை சிறப்பிக்க மதுரை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், நல்லை ஆதீனம் உட்பட பல ஆதீனங்களின் இளைய பட்டங்கள் வருகைதந்து வரவேற்கும் பணிகளிலும், சமயப் பணிகளிலும் முன்னிற்பது பெருமைக்குரியது.



கலாபூஷணம் மாத்தளை
பெ.வடிவேலன்
கலாசார அதிகாரி – ஓய்வுநிலை
கலாசார அமைச்சு

## இன்றைய நாளில்...


- 1411 – தனது மூன்றாவது செல்வம் தேடும் பயணத்தை முடித்துக்கொண்டு நாஞ்சிங் திரும்பிய மிங் சீனத் தளபதி செங் ஹே, தனது பயணத்தின்போது இலங்கையில் மிங்-கோட்டைப் போரில் கைதுசெய்த இலங்கை மன்னன் அழகக்கோனை யொங்கில் பேரரசரிடம் ஒப்படைத்தார்.
- 1885 – பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்ச்சர் தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை வெறிநாய்க்கடியினல் நோய்வாய்ப்பட்ட 9 வயது யோசப் மைசிட்டர் என்ற சிறுவனில் வெற்றிகரமாகச் சோதனை செய்தார்.
- 1935 – சிங்கப்பூரின் தமிழ் நாளிதழ் தமிழ் முரசு ஆரம்பிக்கப்பட்டது.
- 1947 – சோவியத் ஒன்றியம் ஏகே-47 துப்பாக்கிகளைத் தயாரிக்க ஆரம்பித்தது.
- 1956 – சிங்களம் இலங்கையின் அதிகாரபூர்வ மொழியானது.
- 1962 – இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவைக் கொலை செய்த குற்றத்திற்காக சோமாராம தேரர் என்ற பௌத்தத் துறவி தூக்கிலிடப்பட்டார்.

## நக்கல் நமசிவாயம்

சைக்கிள் விற்கிற விலையை பார்த்தால், காலப்போக்கில சைக்கிள்களுக்கும் லீசிங் செய்யவேண்டி வரும்போலக் கிடக்குது..



# பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 'குவாட்' அமைப்பில் சேர இலங்கை நிர்ப்பந்திக்கப்படுமா?



தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி சீனாவுக்கு எதிரான இந்தோ - பசுபிக் கூட்டமைப்பான 'குவாட்'டுக்குள் இலங்கையை இழுப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா இறங்கியிருக்கிறது.

குவாட் அமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு நாடுகளும் வேண்டுகோள் விடுக்கப்படும்வரை காத்திராமல் இலங்கைக்கு உதவவேண்டும் என்றும் அவ்வாறு செய்வதன் மூலம் குவாட்டின் ஆற்றல்களை வெளிக்காட்டும் என்றும் அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு கமிட்டியின் தலைவர் றொபேர்ட் மெனண்டஸ் வலியுறுத்தியிருக்கிறார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கென், ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா, இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் மற்றும் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பெனி வொங் ஆகியோருக்கு ஜூன் 10ஆம் திகதி மெனண்டஸ் எழுதியிருக்கும் கடிதத்தில் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் குவாட்டின் ஆற்றல்களை வெளிக்காட்டுவதற்கு இலங்கைக்கு உதவுவதில் முன்னிற்குமாறு கேட்டிருக்கிறார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கும் கடன் பிரச்சினைக்கும் ராஜபக்ஷ சகோதரர்களையும் சீனாவையும் குற்றஞ்சாட்டியிருக்கும் மெனண்டஸ், சகல சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் மாற்றத்துக்கான நேரம் இது என்பதை வெளிக்காட்ட கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்.

குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அண்மையில் டோக்கியோவில் நடத்திய மாநாட்டில் காலநிலை மாற்றம் தொடக்கம் தொற்றுநோய்த் தடுப்பாற்றல் மற்றும் இணையவெளி பாதுகாப்பு வரை பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கண்ட முன்னேற்றத்தை பாராட்டிய செனட் வெளியுறவு கமிட்டியின் தலைவர் இலங்கை குறித்து கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் தொடங்கி இந்து சமுத்திர அயலகத்தில் குவாட் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய பெருமளவு பணிகள் இருக்கின்றன.

இந்து சமுத்திரத்தில் 2004 டிசம்பரில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு எமது நான்கு நாடுகளும் கூட்டாக செய்த அவசரகால உதவிகளிலேயே குவாட்டின் தொடக்கநிலை முகிழ்த்தது. அந்த உணர்வினதும் பாரம்பரியத்தினதும் அடிப்படையில் குவாட்டின் இன்றைய பயணம் பாரதூரமான மனிதாபிமான நெருக்கடியை தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக்கொண்ட பொருளாதார நெருக்கடியை இலங்கையில் தவிர்ப்பதாக இருக்கமுடியும். இலங்கையில் தோன்றக்கூடிய மனிதாபிமான நெருக்கடி பிராந்திய ரீதியில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

**ராஜபக்ஷக்களும் சீனாவும்**

இலங்கையின் இன்றைய இடர்நிலைக்கு ராஜபக்ஷ சகோதரர்களையும் சீனாவையும் குற்றஞ்சாட்டிய மெனண்டஸ், "ராஜபக்ஷக்களின் கீழ் இலங்கை நிதித்துறை சீர்குலைவினதும் மனித அவலத்தினதும் விளிம்பில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ தனது நாட்டை நேரடியாக சீனக்கடன் பொறிக்குள் கொண்டுபோய் வீழ்த்தினார். பிறகு அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்தமுடியாத வங்குரோத்து நிலைக்கு நாடு செல்வதைத் தடுக்கக்கூடிய விவேகமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினார். இன்று சகல சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் மாற்றத்துக்கான நேரம் இது என்பதை வெளிக்காட்டுவதற்கு கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்.

**இந்தியாவுக்கு பாராட்டு**

பொருளாதார நெருக்கடியைத் தணிக்க இந்தியா தானாக முன்வந்து இலங்கைக்கு உதவுவதில் ஏற்கெனவே பெரும்பங்கை ஆற்றியிருக்கிறது என்று குறிப்பிட்ட மெனண்டஸ், வாஷிங்டன் இலங்கைக்கு நீண்டகால பொருளாதார ஆதரவை வழங்க தயாராகின்றது. இலங்கை மக்களுக்கு ஜப்பான் உணவு உதவியை வழங்குகிறது. இவையெல்லாம் நலம்வாய்ந்த நடவடிக்கைகள் என்று கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

**குவாட்டின் பணி**

குவாட் அமைப்பு செய்யவேண்டிய பணிகள் குறித்து விளக்கிய மெனண்டஸ், "மேலதிக மனிதாபிமான உதவியை திரட்டுதல், அவசரமாக தேவைப்படுகின்ற எரிபொருட்களை வழங்குதல், நிதிக் கணக்கீடு, சுகாதாரம், உணவுப்பாதுகாப்பு மற்றும் பெரும்பாக பொருளாதாரக் கொள்கை ஆகிய துறைகளில் தொழில்நுட்ப ஆதரவையும் ஆலோசனையையும் வழங்குதல் உட்பட குவாட்டின் மூலமாக இலங்கைக்கு செய்யக்கூடிய பெருமளவு காரியங்கள் இருக்கின்றன. குவாட்டின் புதிய மனிதாபிமான மற்றும் அனர்த்த நிவாரண பொறிமுறையூடாக ஜப்பானும் அவுஸ்திரேலியாவும் மிகப்பெரிய பங்கை வகிக்கமுடியும்.

அவ்வாறு செய்வதன் மூலமாக இந்தோ பசுபிக் பிராந்தியம் முழுவதும் சவால்களை கையாளுவதில் குவாட்டுக்கு இருக்கும் ஆற்றல்களை வெளிக்காட்டலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**மனித உரிமைகள் விவகாரம்**

இலங்கையின் மனித உரிமைகள் பிரச்சினையை மறக்காமல் குறிப்பிட்ட மெனண்டஸ் இலங்கையின் உள்நாட்டுப்போரின்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் குவாட் ஒரு பொது நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"இராஜதந்திர முனையில், குவாட் அமைப்பின் நான்கு நாடுகளும் இலங்கைப்போரில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை இவ்வருடம் வரும்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடு மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்தல் தொடர்பில் குவாட்டின் பற்றுறுதியை வெளிக்காட்ட இராஜதந்திர ஐக்கியம் உதவும்" என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

முடிவாக மெனண்டஸ், இந்த வகையான உதவிகள் எல்லாம் பிராந்தியத்தில் மாறிவருகின்ற சூழ்நிலைகள் மற்றும் தோன்றுகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு வெளிக்கிளம்பும் இந்தோ - பசுபிக் கட்டமைப்பில் வலிமையும் விரைவூக்கமும் கொண்ட அத்தியாவசியமான ஒரு கூறாக குவாட் விளங்குகிறது என்பதை வெளிக்காட்டும் என்று கூறியிருக்கிறார்.

**பி.கே. பாலச்சந்திரன்,**
**(நியூஸ் இன் ஏசியா)**

# தன்னிச்சையாக செயற்படும் ஆட்சியாளர்கள் இப்போது ஒன்றிணையாவிடின் நாடு நாசம்

## மைத்ரி உள்ளிட்டோருடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு







பாரிய வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான "தேசிய மறுசீரமைப்பு மற்றும் அடுத்தக்கட்ட பயணம்" என்ற வேலைத்திட்டத்தின் தீர்மானமிக்க கூட்டம் நேற்றுமுன்தினம் (04) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தவிசாளர் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சி.வி.விக்னேஸ்வரன், பி.திகாம்பரம் உட்பட அரசியல் தலைவர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், ஜனரஞ்சன, காமினி வியங்கொட, றொஹான் சமரஜீவ உட்பட சிவில் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாட்டின் ஆட்சியாளர்கள் கடந்த 03 ஆண்டுகளில் மற்றவர்கள் சொல்வதைக் காதில் வாங்காமல், தாங்கள் மாத்திரம் தான் சரி என்று எண்ணிச் செயற்பட்டமையினால் நாடு தற்போது பெரும் பாதாளத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இதிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டும் எனவும்s எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சர்வாதிகாரம் இன்றி அனைவரது கருத்துகளுக்கும் செவிசாய்க்கும் சமூக சீர்திருத்தத்தின் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியும் எனவும், அதற்காக முற்போக்குக் கட்சிகளின் முன்மொழிவுகளையும் யோசனைகளையும் செவிமடுப்பதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், பன்முகப்படுத்தப்பட்ட யோசனைகளை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் இறுதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எதிர்க்கட்சியின் நோக்கமாகும் எனவும் அந்த நிகழ்ச்சி நிரலின் ஊடாக நாட்டு மக்கள் இழந்த மூச்சை மீண்டும் வழங்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் ஒசாகாவில் நடமாடும் கொன்சியூலர் சேவை ஆரம்பித்து வைப்பு





டோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகம் அண்மையில் ஒசாகாவிலுள்ள உமேடா ஸ்கை கட்டிடத்தில் நடமாடும் கொன்சியூலர் சேவையை நடத்தியது. கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல், சான்றொப்பம், வாக்குமூலங்கள் மற்றும் ஏனைய கொன்சியூலர் சேவைகள் உள்ளிட்ட இந்த சேவையின் மூலம் வழங்கப்பட்ட வசதிகளால் 50இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் கொன்சியூலர் சேவை இலங்கையர்களுக்காக காலை 09.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை திறந்திருந்தது. ஒசாகா, ஹியோகோ, நகோயா, நாரா மற்றும் கியோட்டோ மற்றும் ஐச்சி மாகாணங்களில் வசிக்கும் இலங்கை மாணவர்கள் உட்பட இலங்கையின் புலம்பெயர் சமூகத்தினர் இந்தச் சேவைகளைப் பெற்றுக்கொண்டனர்.

கொன்சியூலர் சேவையில் அமைச்சர், ஆலோசகர் மற்றும் தூதரக ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஜப்பானிலுள்ள இலங்கை வாகன சங்கம் நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கியது.

# யாழ். சர்வதேச விமான நிலையத்தில் இராணுவ சிற்றுண்டிச்சாலை திறந்து வைப்பு




யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினூடாக பயணங்களினை மேற்கொள்கின்ற உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகளின் மற்றும் அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் பயன்பாட்டுக்கும் தேவைப்பாடுகளிற்கும் பயன்படுத்தும் வகையில் விமான நிலையத்தின் சூழலில் இலங்கை இராணுவத்தின் 07ஆவது பெண்கள் படையணியினால் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேசுந்தரவினால் நேற்று முன்தினம் (04) திறந்து வைக்கப் பட்டது. இதன் மூலமாக விமான நிலைய பணியாளர்கள் மற்றும் பயணிகளுக்கு தூய்மையான சுகாதார பாதுகாப்புக் கொண்ட உணவுகள் மற்றும் பானங்களும் சாதாரண விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த 32 வயதான இளைஞர் உயிரிழப்பு



ஹங்வெல்லயில் மிகநீண்டநேரம் எரிபொருள் வரிசையில் காத்திருந்த 32 வயதான இளைஞர் ஒருவர் சுகயீனம் காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பசியோடு காத்திருந்த அவருக்கு ஏற்பட்ட இருதய கோளாறு மற்றும் இரத்தவோட்டத்தின் அதிகரிப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சாலாவ தோட்டத்தைச் சேர்ந்த கே. திலீபன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை ஹங்வெல்லயில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்துக்கு முச்சக்கர வண்டிக்கென பெற்றோல் பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்துள்ளார். இந்நிலையில் மறுநாள் சனிக்கிழமை மாலை இவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் (04) உயிரிழந்துள்ளார்.

# மக்கள் வங்கிக்கு 61ஆவது ஆண்டு நிறைவு









மக்கள் வங்கியானது நிறுவப்பட்டு ஜூலை முதலாம் திகதியன்று, 61 ஆண்டு காலம் பூர்த்தியாகின்றது. அதனையொட்டி ஒரு சிறிய நிகழ்வொன்று மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின்போது நாட்டுக்கு, மக்களுக்கு, வாடிக்கையாளர்களுக்கு மற்றும் மக்கள் வங்கியை நிறுவுவதற்கு முன்னோடியாய் இருந்த அனைத்து தலைவர்களுக்கும், முன்னாள் மற்றும் தற்போதைய ஊழியர்களுக்கும் ஆசிகள் வழங்கிடும் வகையில் சர்வமத அனுட்டானங்கள் இடம்பெற்றன. இதனை மக்கள் வங்கியின் பௌத்த சங்கம், இந்து மன்றம், முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் கிறிஸ்தவ சங்கத்தினர் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்திருந்தனர். இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமையாளர் குழு மற்றும் ஊழியர்கள் குழுவும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் ஓய்வு பெற்ற ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) - வெள்ளவத்த கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

**பொரலஸ்கமுவயில் வசிக்கும் மொஹமட் சியாம் அஹமட் ஸஹரான்** என்பவர் **"கடப்பாட்டாளர்களாகவும்/ ஈடுவைத்தவராகவும்"** என்ற வகையில் செலான் வங்கியின் சார்பாக **பிரசித்த நொத்தாரிசு** T.A.N.N. **தென்னகோன்** என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 மார்ச் மாதம் 29ஆம் திகதியிடப்பட்ட 2073ஆம் இலக்க பிணை முறியின் கீழ் அடமானப் பத்திரத்தில் செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில் தவறிழைத்துள்ளார். ஆதலால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது.

**2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி, இல. 90, காலி வீதி, கொழும்பு 03இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கோவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் சியனே கோரலை அதிகாரி பத்துவில் மஹர பிரதேச சபை அலுவலகத்தில் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கடவத்த பஹல கரகஹமுன மேற்கு வரிமதிப்பீட்டு இலக்கம் 246/02 ஐ உடைய 249/B கிராம சேவகர் பிரிவிற்குள் **பஹல கரகஹமுன** வில் உள்ள **உத்தரவு பெற்ற நில அளவையாளரான ஜே.ஏ. ஆனந்த சந்திரசிறி** என்பவரால், 2010 ஆகஸ்ட் 1ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட **1171ஆம் இலக்க** நில வரைபடத்தில் அமைந்திருக்கும் **கோன்கஹாவத்த** என அழைக்கப்படும் காணியானது **லொட் 1** என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் பரப்பளவானது **பதின்மூன்று புள்ளி எட்டு இரண்டு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.13.82)** அல்லது **0.03496 ஹெக்டயர்** மற்றும் அத்துடன் அதே காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் அதிலுள்ள மண் மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** கடவத்தை நகரில் இருந்து ராகம வீதி ஊடாக 1.90 Kms அதிவேக நெடுஞ்சாலை சுற்றுவட்டாரத்திற்கு வீதிக்கு முன்பாக வீதியின் அடையாளத்துடன் உள்ள 11 அடி அகலமான கொங்றீட் செய்யப்பட்ட வீதியின் ஊடாக 75 மீற்றர் தூரம் சென்ற பிறகு வலது பக்கத்தில் இந்த விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2021.08.20ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021.07.28ஆம் திகதி டெய்லி FT, அத மற்றும் தினக்குரல் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் -** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.
(1) கொள்வனவு விலையின் 10%; (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் 2.5%; (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-;
(5) இலிகிதர் மற்றும் சுவர்ப்லோர் கட்டணங்கள்; (6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தரமாலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.
பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு03. தொலைபேசி இலக்கங்கள்: 011 2456485, 011 2456479, 011 2456473

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடாத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே, நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல, 9-I, ஹைலெவல் வீதி, சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம. தொலைபேசி இலக்கம்:**
071 4318252, 011-2173282

# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து ஸ்தம்பிதம்

## மாற்று வழியைப் பயன்படுத்த பொலிஸார் கோரிக்கை



(செ.தி.பெருமாள்)

நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியாவிலிருந்து நோட்டன் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் நேற்று அதிகாலை மண்மேடு ஒன்று சரிந்து விழுந்ததில் அவ்வீதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

திபட்டன் மற்றும் 5ஆம் கட்டைப் பகுதியின் பிரதேசங்களுக்கு இடையில் பாரிய மண்மேடு சரிந்துள்ளதால் பிரதான வீதி முழுமையாக மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், தியகல பகுதியிலும் பாரிய மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

எனவே, கினிகத்தேனை, மஸ்கெலியா – நோட்டன் வீதியை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு நோட்டன் பொலிஸ் நிலைய அதிகாரி மற்றும் பொலிஸார் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அதேவேளை, ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் தியகல பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக குறித்த வீதியூடான போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகவும் அவதானமாக போக்குவரத்தில் ஈடுபடுமாறும் பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.

தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு முதல் மத்திய மலைநாட்டில் இடி, மின்னலுடன் கனத்த மழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## கொழும்புக்குச் சென்ற நோர்வூட் பெண் மாயம்

(செ.தி.பெருமாள்)



டிக்கோயா டங்கள் தோட்டத்தைச் சேர்ந்த பத்மினி ஐராங்கனி (நிலூக்கா) என்பவரை கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி முதல் காணவில்லையென நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் அவரது கணவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரது காலில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக கொழும்பில் உள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு சிகிச்சை பெற ஏப்ரல் 16ஆம் திகதியன்று சென்றவர் அன்றைய தினம் தொடக்கம் காணவில்லை என்றும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக தேடியும் மனைவியை காணவில்லை என கணவர் தெரிவித்துள்ள அதேவேளை, அவர் தொடர்பாக தகவல் கிடைத்தால் 051-2240222 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு நோர்வூட் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.



**சீரற்ற வானிலை காரணமாக கம்பளை நகரில் இருந்து சக்கரான்கொட்டுவ பிரதேசத்திற்கு செல்லும் பிரதான வீதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு பெய்த அடைமழை காரணமாக இந்த பிரதான வீதியில் மரம் முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், மின்சார தூண்களும் உடைந்து வீழ்ந்து கிடந்ததை அவதானிக்க முடிந்தது. (கம்பளை யோகா)**

## இலைகளின்மேல் அரசுக்கெதிரான வாசகங்கள்; கேகாலையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



'74 வருட சாபத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்கள் ஆட்சியைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில், ஐக்கிய மக்கள் சக்தியினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கேகாலை கலிகமுவ, தமுனுபொல கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தின்போது, அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்களை இலைகளின் மேல் எழுதியிருந்தனர். அத்துடன், பிரதான பதாகையை, தென்னம் ஓலையில் வேயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

## போஷாக்கு உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் போஷாக்கு குறைபாட்டினை நிவர்த்தி செய்வதன் மூலம் மாணவர்கள் கல்வி கற்கும் ஆற்றலை அதிகரிக்க முடியும் என்ற நோக்கில், சதானந்தன் திருமுருகன் தலைமையில் இயங்கிவரும் விஷ்ணு ஆரோஹணம் சமூக சேவைகள் மன்றத்தின் ஊடாக பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக போஷாக்கு செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக கொட்டகலை பிட்டவின் பாடசாலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 தொடக்கம் 10 வயது வரையான சுமார் 60 மாணவர்களுக்கும், லிந்துலை டீ மலை தோட்டத்தைச் சேர்ந்த 50 பாடசாலை மாணவர்களுக்கும், வலஹா பகுதியை சேர்ந்த 60 மாணவர்களுக்கும் போஷாக்குப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



**மலையகத்தில் இடைக்கிடையே நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மூடுபனி நிலவுகின்றது. இது போக்குவரத்து செயற்பாடுகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் என்றும் இதனால் வாகன சாரதிகள் மிக அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (கினிகத்தேனை நிருபர்)**

# சட்டவிரோதமாக கடற்றொழிலில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது





இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்புக்குள் பிரவேசித்து, வட கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடற்றொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர் படகை துரத்தியடிக்கும் நடவடிக்கையை கடந்த 03ஆம் திகதியிலிருந்து கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர். இதன்போது, இலங்கை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்ட அந்த இயந்திரத்திலிருந்து 12 இந்தியப் பிரஜைகள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச கடல் எல்லையை மீறி, இந்தியாவுக்கு சொந்தமான ட்ரோலர் இயந்திரங்களில் மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அநாவசியமாக நுழைந்துள்ளனர். இதுதொடர்பில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


அதற்கமைய, கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவப் படகுகள் மற்றும்



மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அடுத்தக்கட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளினூடாக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதனை அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## துருக்கி விமானம் கட்டுநாயக்கவில் விபத்து








விமான நிலையத்திலிருந்து புறப்படத் தயாராக இருந்த துருக்கி நாட்டுக்கு சொந்தமான சரக்கு விமானமொன்று, கடும் காற்றின் காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

துருக்கி விமான சேவைக்கு சொந்தமான ஏ - 330 - 300 எயார் பஸ் வகையைச் சேர்ந்த சரக்கு விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விமானம் துருக்கி, இஸ்தான்புல்லிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி வந்திருந்தது.

அதன்பின்னர், விக்டோரியா சீக்ரட் ஸ்டோர்ஸ் உற்பத்தி, 45 மெட்ரின் தொன் ஆடைகளை எடுத்துவந்த இந்த விமானம், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து துருக்கி, இஸ்தான்புல்லை நோக்கி பயணிக்க தயாராக இருந்தது.

அதன்போது, கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசத்தில் வீசிய கடும் காற்றின் காரணமாக, இந்த விமானத்தில் ஏற்றுவதற்கு தயாராக இருந்த கொள்கலன், ஸ்ரீலங்கன் விமான சேவை விமான செயற்பாட்டாளர்களின் தவறினால் குறித்த விமானம் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததையடுத்து,

குறித்த கொள்கலன் சறுக்கிச் சென்று விமானத்தின் எஞ்சின் மீது மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதன் காரணமாக இந்த விமானத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன், விமானத்தின் எஞ்சினை புனரமைப்பு செய்வதற்கும், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு குறித்து அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ் - மனுஷ நாணயக்காரவுக்கிடையில் கலந்துரையாடல்



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (04) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய சூழலில் இன்றியமையாத வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியமான வழிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதில் உள்ள இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்படக்கூடிய வழிமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து, தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகளின் பங்கேற்புடன், இரு அமைச்சர்களும் நடத்திய மெய்நிகர் சந்திப்பு நடைபெற்றது.

ஆரம்ப உரையை ஆற்றிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இலங்கை தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் முக்கிய பங்காற்றுவதாக வலியுறுத்தியதுடன், பொருளாதார இராஜதந்திரக் கட்டமைப்பிற்குள் தூதரகங்களின் முக்கிய முன்னுரிமையாக உள்ள சாத்தியக்கூறுகளை முன்கூட்டியே ஆராயுமாறு அனைத்து தூதரகங்களையும் ஊக்குவித்தார்.

வேலைவாய்ப்பு தொடர்பான விடயங்களில் பங்குதாரர்களின் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை விரைவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, உத்தியோகபூர்வ வழிகளில் இலங்கைத் தொழிலாளர்கள் தமது பணத்தை நாட்டிற்கு அனுப்புவதை ஊக்குவிக்குமாறு தூதரகங்கள் / பணிமனைகளின் தலைவர்களின் ஆதரவைக் கோரினார்.

மேலும், நாட்டின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் விசேட ஊக்குவிப்புத் திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என அமைச்சர் நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

விரிவான மற்றும் ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றத்தின்போது,

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பில் தூதரகங்கள் ஏற்கனவே முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை தூதரகத் தலைவர்கள் விவரித்தனர்.

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 265 பேர் இரு வாரத்தில் அதிகாரிகளால் கைது

கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சட்டவிரோதமாக நாட்டை விட்டு தப்பியோட முயற்சித்த மேலும் 75 பேரை கைது செய்துள்ளனர். அதன்படி, ஜூன் 15 முதல் 03ஆம் திகதி வரை குறைந்தது 265 பேரை கைது செய்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி திருகோணமலை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கிடமான மீன்பிடிப் படகில் 41 ஆண்கள், 05 பெண்கள் 05 குழந்தைகள் உட்பட மொத்தமாக 51 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. அவர்களை கடற்படையினர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மாரவில கடற்படை, இலங்கை கரையோர காவல்படை மற்றும் பொலிஸார் ஆகியோர் தனித்தனியாக கண்டுபிடித்து, நாட்டை விட்டு வெளியேற விடுதியில் தங்கியிருந்த 24 பேரை கைது செய்துள்ளனர்.

இந்தக் குழுவில் 08 ஆண்கள், 06 பெண்கள் மற்றும் 10 குழந்தைகள் உள்ளடங்குவர். குறித்த குழுவினர் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்த விடுதி காப்பாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் மட்டக்களப்பு, வாழைச்சேனை மற்றும் சிலாபம் பிரதேசங்களை சேர்ந்தவர்கள். அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய வாரங்களில் சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முற்பட்டவர்கள் மற்றும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு: ஜூன் 27ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த 47 பேர் நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அதே தினத்தில் கிழக்கு கடற்கரையிலிருந்து நாட்டை விட்டு வெளியேற முயன்ற 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜூன் 23ஆம் திகதி நாட்டை விட்டு அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 35 பேர் பாணந்துறையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஜூன் 15ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேற முயன்ற 64 பேர் கிழக்கு கடற்கரையில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஸ்ரீ வீரமா காளியம்மன் ஆலய 16ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் (04) புஸ்பரத திருவிழா இடம்பெற்றபோது வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து பிள்ளையார், முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோருடன் வீரமா காளியம்மன் புஸ்ப ரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார். (யாழ்.நிருபர்)





# ஐ.ஓ.சி. நிறுவனம் தனியாருக்கு பெற்றோல் வழங்கினால் கறுப்புச் சந்தையை கட்டுப்படுத்த முடியாது

## செயலர் மகேசன் தெரிவிப்பு



எரிபொருள் கறுப்புச் சந்தையை தம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது என யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் கைவிரித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது ஐ.ஓ.சி. எரிபொருள் விநியோகஸ்தர் பொதுமக்களுக்குத்தான் தாம் எரிபொருள் வழங்குவோமென அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கமைவாக யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழில் ஐ.ஓ.சி. நிறுவனம் பொதுமக்களுக்கு எரிபொருளை வழங்குவோம் என ஊடக சந்திப்பு நடத்தியதாக அறிகிறேன். அவர்கள் தமது எரிபொருள் விநியோகம் தொடர்பில் மாவட்ட செயலகத்திற்கு எவ்விதமான எழுத்து மூலமாக அறிவித்தல் எதனையும் விடுக்கவில்லை.

வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருள் வழங்க குறித்த நிறுவனம் நடவடிக்கை எடுக்குமானால் முறையான ஒரு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல் வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருளை வழங்கும்போது அருகிலுள்ளவர்கள் தொடர்ச்சியாக எரிபொருளை பெறக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும் நிலையில் கறுப்புச் சந்தையை கட்டுப்படுத்த முடியாதுபோகும்.

ஆகவே, எரிபொருள் விநியோகத்தை சிறப்பாக மேற்கொள்வதற்கு மாவட்ட செயலகம் மட்டும் தனித்து செயற்படுத்தி விட முடியாத நிலையில் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் – என்றார்.

# எருக்கலம்பால் விழுந்ததால் பெண்ணின் கண்பார்வை பாதிப்பு

(யாழ். நிருபர்)

குடும்பப் பெண்ணொருவரின் கண்ணுக்குள் எருக்கலம்பால் விழுந்ததால் அவர் பார்வை இழக்கும் நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் .

சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த சோகேஸ்வரன் நாகராணி (வயது 52) என்ற குடும்பப்பெண், சதுர்த்திப் பூஜைக்கு வெள்ளை எருக்கலம்பூ பறிக்கும்போது பூவிலிருந்து பால் கண்ணுக்குள் விழுந்துள்ளது.

எனினும், அதைப் பொருட்படுத்தாது வழிபாடு முடித்து வீடு திரும்பும்போது அவருக்குக் கண் பார்வை தெரியாத நிலை காணப்பட்டது.

அதனையடுத்து, அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தெரிவு




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தெரிவு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நலச்சேவைகள் கிளை உதவிப் பதிவாளர் ஐங்கரன் மற்றும் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் ராஜயுமேஷ் தலைமையில் இடம்பெற்ற தெரிவில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக கலைப்பீட மாணவர் அ.விஜயகுமார், செயலாளராக விஞ்ஞானபீட மாணவர் எஸ்.ராவீன், பொருளாளராக முகாமைத்துவபீட மாணவர் எஸ்.சேந்தன் ஆகியோரும் ஏனைய உறுப்பினர்கள் ஒவ்வொரு பீடத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# குழப்பங்களுக்கு மாவட்ட செயலகமே காரணம்: யாழ். செஞ்சிலுவை சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

(யாழ். நிருபர்)

பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து மாவட்ட செயலகம் தலையிட்டமையாலேயே எமது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பங்கள் ஏற்பட்டன என யாழ். மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் கு. கிருஷ்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (04) ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வருவாயை நோக்கியே குறித்த எரிபொருள் நிரப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதனூடாக கிடைக்கின்ற வருமானத்தைக்கொண்டு மக்களுக்கு நிவாரணம், மருத்துவம் உள்ளிட்ட சேவைகளை ஆற்றிவருகின்றோம்.

எமது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இதுவரைகாலமும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மக்களுக்கு எரிபொருளை விநியோகித்து வந்தோம்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்புத் தரப்பினதும் கச்சேரியினதும் செயற்பாடுகளால் மக்களுக்கு உரிய முறையில் எரிபொருளை பகிர்ந்தளிக்க முடியவில்லை.

யாழ். மாவட்ட செயலகத்தினூடாக அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் எனத் தெரிவிக்கப்பட்டு ஆயிரத்துக்கும் அதிகமானவர்களின் பெயர்ப்பட்டியல் கையளிக்கப்பட்டு அதனை பகிர்ந்தளிக்க முற்பட்டபோதே பிரச்சினைகள் ஏற்பட்டன.

ஐந்து நாட்களுக்கு மேலாக காத்திருக்கின்ற மக்களை விட்டுவிட்டு உடனடியாக வந்து பெருந்தொகை எரிபொருளை கேட்டதாலேயே மக்களுக்கு எரிபொருளை உரிய முறையில் பகிர்ந்தளிக்க முடியவில்லை.

உண்மையில் செஞ்சிலுவைச் சங்கம் என்ற அடிப்படையில் மக்களுக்குச் சேவை செய்வதே எங்கள் நோக்கமாகும். அதனையே நாங்கள் தொடர்ந்தும் செய்வோம். எதிர்காலத்திலும் அவ்வாறுதான் செயற்படுவோம்.

அடுத்த முறை பெற்றோல் வருமாக இருந்தால் நாங்கள் நிச்சயமாக பொதுமக்களுக்குத்தான் வழங்க முடிவு செய்திருக்கின்றோம். இந்த முடிவை நிர்வாகக் குழு எடுத்துள்ளது – என்றார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 05.07.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 131 5622 | 143 17 0 |
| கனேடியன் டொலர் | 163 6366 | 176 5225 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 2146 | 44 3160 |
| யூரோ | 258 3824 | 273 4537 |
| ஜப்பான் யென் | 1 4882 | 1 6005 |
| சிங்கப்பூர் டொலர் | 142 5384 | 153 051 |
| ஸ்ரேலிங் பவுன் | 318 570 | 335 2332 |
| சுவிஸ் பிராங்க் | 257 7 46 | 274 0428 |
| ஐ.அ.டொலர் | 244 8422 | 256 1887 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 212 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 43 6 |
| ஓமான் | ஓமான் றியால் | 823 407 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 3547 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 7611 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 8427 |

# மக்கள் மனதில் என்றும் நீங்காத பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி



இன்று அவரது நினைவு தினம்

**கார்த்திகேசு சிவத்தம்பி**

**பிறப்பு** - மே 10, 1932 , கரவெட்டி, யாழ்ப்பாணம்

**இறப்பு** - ஜூலை 6, 2011

**கல்வி** - PhD (பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம், 1970)

MA (இலங்கைப் பல்கலைக்கழகம், 1963)

BA (இலங்கைப் பல்கலைக்கழகம், 1956)

ஸாஹிராக் கல்லூரி (கொழும்பு, 1949-53)

விக்னேஸ்வராக் கல்லூரி (கரவெட்டி, 1948)

**பணி - பேராசிரியர்**

காலஞ்சென்ற கார்த்திகேசு சிவத்தம்பி (மே 10, 1932 - ஜூலை 6, 2011) ஒரு முக்கிய தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் மற்றும்சமூக சிந்தனையாளர் ஆவார்.

யாழ்ப்பாணம் கரவெட்டி மேற்கில் பிறந்த சிவத்தம்பி ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேசுவரா கல்லூரியில் கற்றார். பின்னர் இடைநிலைக் கல்லூரியை கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கற்றார். ஆரம்பத்தில் 1956 முதல் 1961 வரை கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் ஆசிரியராகவும், 1961 முதல் 1965 வரை இலங்கை நாடாளுமன்ற சமகால மொழிபெயர்ப்பாளராகவும் பணிபுரிந்தார்.

இலங்கையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும், பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் பயின்று முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். ஐக்கிய இராச்சியத்திலுள்ள பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் படிப்பை மேற்கொண்டு முனைவர் (Ph.D) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

**பல்கலைக்கழகப் பணி**

1965 முதல் 1970 வரை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும், 1970 முதல் 1975 வரை விரிவுரையாளராகவும், 1976 முதல் இணைப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

1978ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 17 ஆண்டுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். பின்னர் மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் இரண்டு ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். தொடர்ந்து தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வருகைப் பேராசிரியராகவும் ஓராண்டு வரை பணி புரிந்தார். இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற பல்வேறு நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் வருகைப் பேராசிரியராகவும் இருந்துள்ளார்.

**கலைப் பங்களிப்பு**

பல்கலைக்கழக காலத்தில் மேடை நாடகங்களில் நடித்ததோடு பின்னர் வானொலி நாடகங்களிலும் நடித்து புகழ் பெற்றவர். இலங்கையர்கோன் எழுதிய "விதானையார் வீட்டில்" தொடர் நாடகத்தில் இவரே முக்கிய பாத்திரத்தில் நடித்தார்.

**ஆக்கங்கள்**

ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை பல்வேறு துறைகளிலும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உருவாக்கியவர். இவர் முதன்மையாகப் பயின்ற துறைகளுக்குப் புறம்பாகவும் பல துறைகளில் இவர் ஆர்வம் கொண்டிருந்தார். இவரது ஆர்வம், தமிழ், சமயம், சமூகவியல், மானிடவியல், அரசியல், வரலாறு, கவின் கலைகள் எனப் பல்வேறு துறைகளையும் தழுவியிருந்தது. மார்க்சிய சிந்தனைப் போக்குடைய இவர் யாழ்ப்பாணச் சமுதாயத்தின் பல்வேறு குறைபாடுகளையும் கடுமையாக விமர்சித்தார்.

**மறைவு**

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, தனது 79ஆவது வயதில் 2011, ஜூலை 6ஆம் திகதி புதன்கிழமை இரவு 8.15 மணிக்கு கொழும்பு, தெஹிவளையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் காலமானார். அவரது மாணவர்கள் இன்றும் பேராசிரியர் சிவத்தம்பியை நன்றியுடன் நினைவுகூர்கின்றனர்.


திகதி 04.07.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4806
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,386,230.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 4 2 9 7 9 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,592,435.80

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1284
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,339,760.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 9 4 4 3 0 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,074,570.40

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3048
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,460,720.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 02 15 23 34
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,146,595.60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 836
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,800,380.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 24 36 59 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,288,734.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் : 115
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,797,180.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 04 32 58 62 விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,782,730.00

கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1154
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,689,340.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 259,682,154.00
A 05 14 26 46 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk



1990ஆம். ஆண்டின் 4ஆம். இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) - குளியாபிட்டிய கிளை**

**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

முனமல்தெனயலில் வசிக்கும் தென்னகோன் முதியன்சேலாகே ஹேலா குமாறி தென்னகோன் மற்றும் குலசேகர அதிகாரி அப்புஹாமிலாகே சந்தன சிசிர குமார என்பவர்கள் "கடப்பாடுடையவர்/ ஈடுவைத்தவர். என்ற வகையில் தவணை தவறியுள்ளதால், பிரசித்த நொத்தாரிசு D.V.D.R. **அங்கம்மனவி**னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.07.13 ஆம் திகதியிடப்பட்ட 5376 ஆம் இலக்க: ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு E.M.S.De **சேரம்வி**னால். அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014,03.19 ஆம் திகதியிடப்பட்ட 2484 ஆம் இலக்க ஈட்டு முறி, பிரசித்த நொத்தாரிச D.V.D.R. **அங்கம்மனவி**னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013,04,02 ஆம் திகதியிடப்பட்ட 5607 ஆம் இலக்க ஈட்டு முறி, பிரசித்த நொத்தாரிசு E.M.S.De **சேரம்வி**னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014116 ஆம் திகதியிடப்பட்ட 2743 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் செலான் வங்கி பீஎல்ச் யில் அடகுவைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிமற்றும் அதன் சுற்றுச்சூலலானது.

**2022. ஜூலை 28 ஆம் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படிசெலான் வங்கி பீ.எல்.சி யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல 90 காலி வீதி கொழும்பு 03 இல் உள்ள வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கோவிட் 19 நெறிமுறைகளைப்பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

**1ஆவது ஏல விற்பனை - மு.ப 11.00 மணிக்கு:**

**அட்டவணை:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கடுகம்பொல ஹற்பத்துவே யடிகஹா கோரலே. படுவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குள். 1400 ஆம் இலக்க மல்வாநேகெதர கிராம சேவகர் பிரிவிற்குள் துனுகொளவத்தயில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. சேவகர் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.10.30 ஆம் திகதி 3111 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "கஹாடகஹாமுலவத்த" என அழைக்கப்படும் காணியானது லொட் 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித் துண்டின் அளவு இரண்டு றூட் முப்பத்தெட்டு தசம் ஆறு பேர்ச்சஸ் (ஏ0.றூ02.பே.38.6) விஷாலமான கட்டடம், மண், மரங்கள், பயிர் செய்கைகள் மற்றும் இதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

பிரசித்த நொத்தாரிசு D.V.D.R. **அங்கம்மன**வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.07.13ஆம் திகதியிடப்பட்ட முதன்மையான 5376 ஆம் இலக்க ஈட்டு. முறி, பிரசித்த நொத்தாரிசு E.M.S.De **சேரம்வி**னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014,03.19 ஆம் திகதியிடப்பட்ட 2484 ஆம் இலக்க கூடுதல் ஈட்டு முறியின் கீழ் அடகுவைக்கப்பட்ட காணி.

**காணிக்கும் பிரவேசிக்கும் வழி** - குளியாப்பிடிய செலான் வங்கி கிளையில் இருந்து ஹெட்டிபொல வீதி.கேடாக 8Km44 முனமல்தெனிய சந்தி வரை செல்லவும். பிறகு முனமல்தெனிய - கடுபொத வீதியில்.1.2Km முனமல்தெனிய ஆரம்ப பாடசாலை வரை தார் சாலையில் செல்லவும், அவ் வீதியில் 1Km வரை சென்று பிறகு பாடசாலையை கடந்தவுடன் இடது பக்கத்திலுள்ள காணியில் இவ் விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**2ஆவது ஏல விற்பனை - மு.ப 11.15 மணிக்கு:**

**அட்டவணை:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கடுகம்பொல ஹற்பத்துவே யடிகஹா கோரலே. வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் படுவஸ்நுவர மேற்கு பிரதேச செலாளர் பிரிவிற்குள் 1401 ஆம் இலக்க அகவத்த கிராம சேவகர் பிரிவிற்குள் அகரவத்த கிராமத்திலுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். ஜே. அமரதீப என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012.07.01 ஆம் திகதி 326/2012 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "ஹல்பன்வலஹேன" என அழைக்கப்படும் காணியானது லொட் 1ஏ என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித் துண்டின் அளவு பதினைந்து பேர்ச்சஸ் (ஏ0.றூ0.பே.15) விஷாலமான கட்டடம், மண், மரங்கள், பயிர் செய்கைகள் மற்றும் இதில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

பிரசித்த நொத்தாரிசு D.V.D.R. **அங்கம்மனவி**னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.04.02ஆம் திகதியிடப்பட்ட முதன்மையான 5607 ஆம் இலக்க ஈட்டு முறி, மற்றும் பிரசித்த நொத்தாரிசு E.M.S.De **சேரம்வி**னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.11.28 ஆம் திகதியிடப்பட்ட முதன்மையான 2743 ஆம் இலக்க கூடுதல் ஈட்டு முறியின் கீழ் அடகுவைக்கப்பட்ட காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி** - குளியாப்பிடிய நகரத்தில் இருந்து ஹெட்டிபொல வீதி ஊடாக 8,5Km முனமல்தெனிய சந்தி வரை செல்லவும். பிறகு வலது பக்கத்தில் உள்ள கடுபொத வீதி ஊடாக 1.5முஅ. வரை சென்று இடது பக்கத்தில் உள்ள தொரடியகெதர சந்தியில் இருந்து 30 மீற்றர் சென்ற பிறகு இடது பக்கத்தில் உள்ள பாக்ய/பாம் ஹவுஸ் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது இல் விடயத்திற்கான காணியாகும்.

**தீர்மான அறிவித்தல்கள்:** 202.05.13 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.05,20 ஆம் திகதி டெய்லி மிரர், அத மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** - உத்தேச கொள்ளனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை

பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%.
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 25%.
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்,
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

கொள்முதல் விலையின் 90% வீதத்தையும் மிகுதி, இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு. அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது. கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பி.எஸ்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும். பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீஎல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456494, 0112456479.

மேற்படி ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி இடைநிறுத்துவதற்கு / இரத்துச் செய்வதற்கு. வங்கிக்கு அதிகாரமுண்டு.

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர்,**
**விலைமதிப்பீட்டாளர் மற்றும்**
**உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9 - 1, ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 0714318252 - 01/-2173292**

# கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக நாளை வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தத் தீர்மானம்

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் திட்டவட்டம்

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக நாளை (07) அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளது. கல்முனை மாநகர சபை நிர்வாகத்தால் ஊழியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்ற கெடுபிடிகளை ஆட்சேபித்து போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இத்தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் (04) தெரிவித்தார்.

ஊழியர்கள் மீதான கெடுபிடிகளை தீர்த்துவைக்க மூன்று நாட்கள் அவகாசம் வழங்கியுள்ளனர் என்றும் உரிய தீர்வு கிடைக்கத் தவறுகின்ற பட்சத்தில் போராட்டம் நிச்சயம் இடம்பெறும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உயர்பீடம் கல்முனையிலுள்ள தலைமையகத்தில் கூடி இத்தீர்மானத்தை எடுத்தது




என்றும் தெரிவித்த அவர், இதில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களையும் அறியத் தந்தார்.

அதனடிப்படையில் அத்தியாவசிய சேவைகள் வழங்குநர்களாக ஊடகவியலாளர்கள், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் ஆகியோரையும் பிரகடனப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் உள்ளிட்டவற்றை வழங்கவேண்டும், உரிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய அந்தந்த பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் மேலும் ஒரு வருடத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் காலம் நீடிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் பல கோடி ரூபா வரிப் பணம் விரயம் செய்யப்படுகிறது. இதை தவிர்ப்பதற்காக இச்சபைகளுக்கு விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# புகையற்ற புதிய அடுப்பைக் கண்டுபிடித்த மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக சமுர்த்திப் பிரிவில் கடமையாற்றும் தவராசா சுரேஸ் எனும் உத்தியோகத்தர் புகையற்ற புதிய வகை அடுப்பைக் கண்டுபிடித்துள்ளதுடன், குறித்த அடுப்பை நேற்றைய தினம் மாவட்ட செயலகத்தில் அறிமுகம் செய்துவைத்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிவரும் இக்காலகட்டத்தில், எரிபொருள் இல்லாமல் இயங்கக்கூடிய புதிய வகை அடுப்பை மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரனுக்கு அறிமுகப்படுத்தியதுடன், இதன் செயற்றிறன் தொடர்பாக விளக்கமளித்திருந்தார்.

குறித்த புதிய வகை அடுப்பின் பாவனை யானது தற்போதைய காலகட்டத்தின் தேவை கருதிதான் இதனை உருவாக்கியதாக இதன்போது குறித்த உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தில் கூட இவ்வடுப்பை பாவனைக்கு உட்படுத்தக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமத்தினை எதிர்கொண்டுள்ள இக் காலகட்டத்தில் புதிய புகையற்ற அடுப்பை பாவனை செய்வதன் மூலம் பணத்தினை மீதப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன்,மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் கே.தயாபரன் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய விபத்து வாரத்தில் மட்டக்களப்பில் சைக்கிள் சவாரியூடாக விழிப்புணர்வு பவனி



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் ஆலோசனையின்கீழ் தொற்றாநோய் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய விபத்து வாரத்தை முன்னிட்டு சைக்கிள் சவாரியூடாக விழிப்புணர்வு பவனியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்குகளை பின்பற்றி வாகன விபத்துகளைத் தவிர்ப்போம், வீதியில் செல்லும் பாதசாரிகளை அவதானித்து வாகனங்களை செலுத்துவோம், பெற்றோலுக்காக காத்திராது சைக்கிளில் செல்வோம், மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தாது இருப்போம், வீதியில் அவதானமாக செல்வோம், உறவுகளை காப்பாற்றுவோம் போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் பதாகைகளுடன் நடை பவனியானது மட்டக்களப்பு சுகாதார பணிமனையிலிருந்து மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டுக் கோபுரத்தை கடந்து சென்று போதனா வைத்தியசாலையை அடைந்து மீண்டும் அங்கிருந்து லேக் வீதி ஊடாக பிராந்திய சுகாதார பணிமனையினை



சென்றடைந்தனர்.

இந்நிகழ்வின்போது வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருமலையில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் திருட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும் பொதுமக்களை அவதானத்துடன் செயல்படுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலேயே அதிகளவிலான திருட்டுச் சம்பவங்கள் பதிவாகி யுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, வாகன உதிரிப்பாகங்கள் கழட்டுவது மற்றும் வீடுகளில் கொள்ளையடிப்பது, மோட்டார் சைக்கிளில் சென்று தங்க ஆபரணங்கள் திருடுவது போன்ற திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், அத்துடன் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார்சைக்கிள்களிலிருந்து பெற்றோல் திருடுகின்றமை போன்றவை யும் அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உப்புவெளி பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (04) மாத்திரம் 13 திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் மொரவெவ பிரதேசத்தில் ஆறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் மாவட்டத்தில் மொத்தமாக 50இற்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். தங்களது பிரதேசத்தில் எவராவது தேவையற்ற விதத்தில் நடமாடினால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்துமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதான 51 பேருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 51 பேரையும் எதிர்வரும் ஜூலை 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று (05) காணொளி மூலம் உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தினபேரில் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 69 பேரை கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்கல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் ஆகியோரது வழக்குகள் நீதவான் நீதிமன்றிலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன், 5 பேர் வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டதுடன், 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து 51 பேர் தொடர்ந்தும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, பதுளை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நாட்டில் பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ளவர்களை தற்போதைய நாட்டின் எரிபொருள் சூழ்நிலை காரணமாக அழைத்துவரப்படாத நிலையை கருத்திற்கொண்டு காணொளி மூலமாக 51 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# ஹாபீஸ் நஸீர் எம்.பியின் காரியாலயம், வீடு தீவைப்பு: இதுவரை 38 பேர் கைது; 9 பேர் விளக்கமறியலில்

(கனகராசா சரவணன்)


ஏறாவூரில் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு, உறவினரின் வீடு, ஹோட்டல். கடை தீ வைப்பு மற்றும் ஆடைத்தொழிற்சாலை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் (04) 20 வயதுடைய இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டதையடுத்து, இதுவரை 38 பேரை கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 10ஆம் திகதி இரவு ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள காரியாலயம், வீடு, அவரது உறவினரின் வீடு, ஹோட்டல், கடை என்பன தீக்கிரையாக்கியதுடன், 3 ஆடைத் தொழிற்சாலையை முற்றுகையிட்டு சேதமாக்கினர்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டுவந்த நிலையில், நேற்று ஒருவர் கைதுசெய்யப்பட்டதையடுத்து, 16 வயதுடைய இரு சிறுவர்கள் உட்பட இதுவரை 38 பேரை கைதுசெய்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 வயதுடைய இரு சிறுவர்கள் உட்பட 28 பேர் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன், ஏனைய 9 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தொடர் விசாரணையில் நாளாந்தம் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு நகர் பகுதிகளில் திண்மக்கழிவுகள் அகற்றப்படாமையினால் மக்கள் பெரும் சிரமம்!







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையினரால் தொடர்ச்சியாக திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டு வந்த நிலையில், தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மட்டக்களப்பு நகர்ப் பகுதிகளில் ஒழுங்கான முறையில் முன்னரைப்போல் திண்மக் கழிவுகள் அகற்றப்படாமையினால் நகர்ப் பகுதி மக்கள் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் பெரும் அசௌகரியத்தினை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வாரங்களாக மாநகர சபையினரினால் கழிவகற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் பொதுமக்கள் பல பொது இடங்களில் கழிவுகளை வீசிவருவதினால் சூழல் மாசுபடுவதுடன், நோய்த்தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சூழலியலாளர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அது மட்டுமன்றி, பொதுமக்கள் தமது கழிவுகளை தமது குடியிருப்புகளின் முன்னால் உள்ள வீதிகளில் மாநகர சபை ஊழியர்கள் எடுத்துச் செல்வார்கள் எனக் கருதி அதிகளவு கழிவுகளை வீதிகளில் குவித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

உரிய அதிகாரிகள் தக்க நடவடிக்கையை மேற்கொண்டு திண்மக் கழிவுகளை அகற்றுவதன் மூலம் நோய்த்தொற்றற்ற ஆரோக்கியமான மாநகரை பேணுவதற்காக மிக விரைவாக தக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என மாநகர மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த் திருவிழா





(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேசத்தின் நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த பிரசித்திபெற்ற ஆலயமான வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று (05) நடைபெற்றது.


வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பூசைகள் இடம்பெற்றுவந்த நிலையில், நேற்று தேர்த் திருவிழா இடம்பெற்றதுடன், இன்று பாசிக்குடா கடலில் தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிறைவடையவுள்ளது.

வசந்த மண்டப பூஜை இடம்பெற்று சுவாமி தேரில் அமர்ந்து மக்களுக்கு அருள்பாலிக்கும் முகமாக ஆலய முன்றலிலிருந்து பெருந்திரளான பக்கதர்கள் வடம் பிடித்து ஆரம்பமான தேர் பவனி கல்குடா வீதி வழியாக பேச்சியம்மன் ஆலய வீதி, சேர்மன் கனகரெத்தினம் வீதி, கல்குடா வீதி, பிரதான வீதி, விபுலானந்தர் வீதி, கல்குடா வீதி வழியாக ஆலயத்தை சென்றடைந்துள்ளது.

மகோற்சவத்தின் பூசைகள் யாவும் ஆகம பரவீனா, பிரதிஸ்டா சாகரம், வாமதேவ சிவாச்சாரியார் ஆச்சார்ய பூஷனம் சிவஸ்ரீ சபா பாஸ்கரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலயமானது வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் நூறாண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயமாக திகழ்ந்து வருகின்றதுடன், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக சில ஆண்டுகளுக்கு பின் ஆலய உற்சவம் இடம்பெற்ற நிலையிலும் பக்தர்கள் அதிகம் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போழியார் புலம்பல்!



**அரசுக்கு எதிரான இரண்டாம் அலை சுனாமி போல் இருக்குமாம் எண்டு ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசைநாயக்கா சொல்லி இருக்காரு எலுவா?**

**சுனாமியாக வந்தாலும், எரிமலையாக வந்தாலும் கருங்கல்போல் கோட்டாவும், மரக்கட்டைபோல் ரணிலும் ரோசம் இல்லாமல் இருக்கும்வரை ஒண்டுமே நடக்காது. ஒருவாரம் படம் ஓடும். புறகு மௌனமாகும் என்ன நான் சொல்லுறது சரி எலுவா?**

# எழுத்தாளர் றிப்கா அன்ஸாருக்கு இந்தியாவின் "சிந்தனை மாமணி" விருது

(பொலிவேரியன் நிருபர்)

சாய்ந்தமருதைச் சேர்ந்த எழுத்தாளர் றிப்கா அன்ஸார் சிந்தனை மாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதியை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் இளைஞர் வளர்ச்சிப் பேரவை, சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பவுண்டேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய பல்துறை



சாதனையாளர்களுக்கான "பெருந்தலைவர் காமராஜரின் மாமணி விருதுகள் - 2022" வழங்கும் நிகழ்வில் இலக்கியத் துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக இலங்கையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது எனும் ஊரைச் சேர்ந்த எழுத்தாளர் றிப்கா அன்ஸார் சிந்தனை மாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தற்போது கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையின் பிரதி அதிபராகக் கடமையாற்றும் இவரை கல்விச் சமூகம் பாராட்டி மகிழ்கிறது.

# சத்திர சிகிச்சை வைத்தியர் இல்லாமல் இயங்கும் கிண்ணியா தள வைத்தியசாலை

## ஒரு வருடமாக மக்கள் அசௌகரியம்

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா தள வைத்தியசாலை பல்வேறு பௌதீக வளம், வைத்தியர் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் பற்றாக்குறைவுடன் இயங்கி வருகின்றது. இந்நிலையில், இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிக்கொண்டிருந்த சத்திரசிகிச்சை வைத்தியர் 2021.07.21ஆம் திகதி வைத்தியசாலையிலிருந்து எவ்வித பதிலுமின்றி உயர் கல்விக்காக விடுவிப்புச் செய்யப்பபட்டுள்ளார். அன்றிலிருந்து இற்றைவரைக்கும் சுமார் ஒரு வருட காலமாக சத்திர சிகிச்சை வைத்தியர் நியமிக்கப்படாமை மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும் - என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.நசுருதீன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (05) விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இதை ஒரு புறக்கணிப்பாக கூட பார்ப்பதற்கு வாய்ப்புள்ளது. சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவரை நியமித்துத் தருகிறோம் என உரிய அதிகாரிகள் பலமுறை வாக்குறுதி அளித்தும் கால இழுத்தடிப்பு செய்யப்பட்டே வந்துள்ளது. காலடியில் சிகிச்சை பெற்றுவந்த கிண்ணியா மக்கள், இன்று சத்திர சிகிச்சைக்காக 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மூதூர் வைத்தியசாலை 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள திருகோணமலை பொது வைத்தியசாலைகளுக்கு பல ஆயிரம் ரூபா செலவழித்து செல்லவேண்டிய ஓர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தற்போது எமது நாடும் நாட்டு மக்களும் முகங்கொடுத்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடி, தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு, எரிபொருள் தட்டுப்பாடு இவைகளுக்கு மத்தியில் கிண்ணியாவிலிருந்து திருகோணமலை மூதூர் வைத்தியசாலைகளுக்கும் சத்திர சிகிச்சைக்காக சென்று வருவது என்பது மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. போக்குவரத்து சீராக இடம்பெறாமை, வாடகைக்கு வாகனங்களை பெற்றுக்கொள்ள முடியாத இந்நிலையில், நோயாளிகள் உரிய நேரத்துக்கு சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்கு முகங்கொடுப்பதோடு மேலும் அவர்களது நோய் அதிகரிப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

மாதாந்தம் சத்திரசிகிச்சை கிளினிக் நோயாளிகளுக்கான சிகிச்சைகளை கிண்ணியா வைத்தியசாலையில் கடமையாற்றும் ஏனைய வைத்தியர்களால் வழங்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது. தற்போது மக்கள் முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிகளை கருத்திற்கொண்டு இனிமேலும் தாமதிக்காமல் கால இழுத்தடிப்புகளை செய்யாமல் மக்களின் நலனுக்காக உடனடியாக ஒரு சத்திர சிகிச்சை வைத்தியரை நியமிப்பதற்கு கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆளுநர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் சார்பாக மக்கள் பிரதிநிதி என்ற வகையில் கேட்டுக்கொள்கின்றேன்.

# சுத்தமான குடிநீரின்றி அவதியுறும் நொச்சிக்குளம் மக்கள்

## பொதுக்கிணறுகளை சுத்தம்செய்து தர கோரிக்கை





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நொச்சிக்குளம் பிரதேச மக்கள் சுத்தமான குடிநீரின்றி அவதியுற்று வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதற்கு திரியாய் சந்தி மற்றும் சாந்திபுரம் பகுதிக்கு செல்லவேண்டியுள்ளதாகவும் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் இல்லாமையினால் தூர இடத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், சுத்தமான குடிநீருக்குப் பதிலாக கிணற்று நீரை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் சிறுவர்களுக்கு சலக் கடுப்பு ஏற்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதற்கு ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு நடந்து செல்வதாகவும், எவருடைய உதவியும் கிடைப்பதில்லை எனவும் பாதிக்கப்பட்ட தாயொருவர் குறிப்பிட்டார்.

நொச்சிக்குளத்தில் இரண்டு பொதுக்கிணறுகள் காணப்படுவதாகவும், கோடை காலங்களில் கூட இக்கிணறு வற்றுவதில்லை எனவும் இக் கிணற்றினை குடிப்பதற்கு வடிகட்டி சுத்தம் செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, சுத்தமான குடிநீர் இல்லாமையினால் அதிகளவிலான மக்களுக்கு சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் சிறார்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கம் சுத்தமான குடிநீரை பெற்றுத் தருவதற்குரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் எனவும் நொச்சிக்குளம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இரவு உணவை வீதியின் ஓரத்தில் சமைத்து உண்ட கல்முனை முச்சக்கரவண்டி சாரதிகள்

## எரிபொருளைப் பெற இரவிரவாக காத்திருக்கும் அவலம்

(எம்.என்.எம்.அப்ராஸ்)

நாட்டில் தற்பொழுது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பலரின் வாழ்வியல் நெருக்கடி நிலையில் காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் முச்சக்கரவண்டி ஓட்டுவதை தங்களது வாழ்வாதாரமாகக்கொண்ட முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் கல்முனையில் எரிபொருளைப் பெற கடந்த மூன்று நாட்களாக நீண்ட வரிசையில் முச்சக்கரவண்டியினை நிறுத்திவிட்டு தமக்கு எரிபொருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இரவு - பகலாக காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் தமது இரவு உணவினை உண்ணும் முகமாக வீதியின் அருகில் விறகைப் பயன்படுத்தி ரொட்டி தயாரிப்பில் ஈடுபட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு (04) பதிவாகியது.

தினசரி முச்சக்கரவண்டி ஓட்டுவதை தங்களது வாழ்வாதாரமாகக்கொண்டுள்ளதாகவும், தங்களுக்கு முச்சக்கரவண்டிகளைச் செலுத்துவதற்கு பெற்றோல் கிடைக்காதது மிகவும் சிரமமாகவுள்ளதாகவும், வருமானமில்லாத நிலையில், கடந்த 03 நாட்களாக வீதியில் காத்திருப்பதுடன், எரிபொருள் நிலையத்துக்கு அருகில் முச்சக்கரவண்டியினை நிறுத்தி வைத்துக்கொண்டு சீரான உணவு, உறக்கமின்றி வீடுகளுக்கு சென்றுவரக் கூட எரிபொருள் இல்லாத காரணத்தினால் குடும்பங்களை பிரிந்து எரிபொருளைப் பெற பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் எரிபொருள் கிடைக்காமையினால் அவ்விடத்தை விட்டு முச்சக்கரவண்டி நகர முடியாத நிலையில் இருப்பதாகவும் ஓட்டோ ஓட்டுநர்கள் கவலையை வெளிப்படுத்தினர்.

மேலும் தமக்கான எரிபொருளை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.





# மட்டக்களப்பு கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கொடியேற்ற திருவிழா









(கனகராசா சரவணன்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் (04) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மாரசூரனை வதைத்து மாரியம்மன் எனப் பெயர்கொண்ட உலகமெல்லாம் இரட்சித்துவரும் அன்னை மாரியம்மன் அகல் விளக்கு எரியவைத்த காலத்துக்கு முந்திய காலமாக மட்டக்களப்பில் அருள்பாலித்து வருகின்றாள். அம்மாளின் மஹோற்சவ திருவிழா ஆலய பிரதம குரு ஸ்ரீ நிஜோத் குருக்களின் வழிகாட்டலில் விநாயகர் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி விசேட கும்ப பூஜைகள் நடைபெற்றதுடன், பிள்ளையாரடி புரவிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொடிச்சீலை ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது.

இதன்போது கொடிச்சீலைக்கு விசேட பூசைகள் நடைபெற்றதுடன், மூலமூர்த்தி மற்றும் பாரிபால மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக பூசைகளும் நடைபெற்று வசந்த மண்டபத்தில் எழுந்தருளியுள்ள அம்மனுக்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டன.

அதனைத்தொடர்ந்து கொடிச்சீலை ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு கொடித்தம்பத்துக்கு அருகில் விசேட பூஜைகள் நடத்தப்பட்டதுடன், வேத,மேள வாத்தியங்கள், நாதங்கள் முழங்கல், அடியார்களின் அரோகரா கோஷத்துடன் சரியாக நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றப்பட்டது. அத்துடன், கொடியேற்றத்தினை தொடர்ந்து தம்பத்துக்கு அபிஷேகமும் செய்யப்பட்டு விசேட பூசையும் இடம்பெற்றது. இதன்போது கொடியேற்ற பிரதம குரு பிரம்மஸ்ரீ ஆதி சௌந்தரராஜ குருக்களினால் அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

10 தினங்கள் நடைபெறுகின்ற ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்திரத்தேர் பவனி இடம்பெறவுள்ளதுடன், புதன்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உமரி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலம் மீட்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள உமரி கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் (04) இரவு மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கோமாரி பிரதேசத்தைச் சேர்ந்த பெரியதம்பி சற்குணம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உமரி பகுதி கடற்கரையில் உயிரிழந்த நிலையில், சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு 6.30 மணியளவில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளதை கண்டுள்ள பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# பெரியநீலாவணை பேச்சித்தாயாருக்கு திருச்சடங்கு



(வெல்லாவெளி நிருபர்)

பெரியநீலாவணையில் பேச்சித்தாயாருக்கு கோலகலமாக திருச்சடங்கு இடம்பெறுகின்றது.

பெரியநீலாவணை பேச்சியம்மன் ஆலய வருடாந்த ஆனி உத்தர திருச்சடங்கானது கடந்த புதன்கிழமை திருக்கதவு திறத்தல், கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் சனிக்கிழமை (09) பள்ளயச்சடங்கு மற்றும் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த திருச்சடங்கு நிறைவு பெறவுள்ளதாக ஸ்ரீ மஹா விஷ்ணு பேச்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் தலைவர் பொன்.ஜெகநாதன் தெரிவித்தார்.

இவ்வருடாந்த உற்சவ சடங்கில் ஆலயத்தில் தினமும் பகல், இரவு பூசைகள், அம்மன் ஊர்காவல் பண்ணுதல் நிகழ்வு நடைபெற்று எதிர்வரும் புதன்கிழமை கன்னிக்கால் வெட்டும் நிகழ்வும் நடைபெறுவதுடன், அம்மனுக்கு திருக்கல்யாண நிகழ்வும், பால்பானை எடுக்கும் நிகழ்வும் நடைபெற்று வருடாந்த நிகழ்வுகள் நிறைவு பெறவுள்ளது.

# கந்தளாயில் எரிபொருள் பெற்றுத்தருமாறு கோரி இராணுவத்தினருடன் ரகளையில் ஈடுபட்ட துறவி





(கந்தளாய் நிருபர்)

கந்தளாயில் தமக்கு பெற்றோல் பெற்றுத்தருமாறு கோரி இராணுவத்தினருடன் பௌத்த துறவியொருவர் ரகளையில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (04) இரவு 7.30 மணியளவில் கந்தளாய் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

கந்தளாயிலுள்ள மெதகம விகாரையின் விகாராதிபதி ஒருவரே இவ்வாறு எரிபொருள் நிரப்புமாறு கோரி இராணுவத்தினருடன் ரகளையில் ஈடுபட்டார்.

பௌத்த துறவி தினமும் எரிபொருள் நிரப்புவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய எரிபொருள் நிரப்ப முடியாது என தெரிவித்ததையடுத்தே பௌத்த துறவி ரகளையில் ஈடுபட்டார்.

தமக்கு எரிபொருள் நிரப்ப முடியா விட்டால் இராணுவத்தினருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்து இராணுவத்தினருக்கு கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பௌத்த துறவி மேற்கொண்டார்.

இதனையடுத்து பொலிஸார் துறவியை சமாதானப்படுத்தி எரிபொருள் நிரப்பினார்கள்.

வரிசையில் எரிபொருளுக்காக காத்திருந்த பொதுமக்கள் பௌத்த துறவியின் செயற்பாட்டை கடுமையாக விமர்சித்தார்கள். இதனையடுத்து பௌத்த துறவி புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

# கிண்ணியா சதொசவில் மக்கள் நீண்ட வரிசை

## பொருட்கொள்வனவில் முண்டியடிப்பு




(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா கச்சக்கொடித்தீவில் உள்ள சதொச விற்பனை நிலையத்தில் பொருட் கொள்வனவு செய்ய மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக நீண்ட வரிசையில் காத்திருந்தும் இதனை பெற்று வருகின்றனர். நேற்று (05) இவ்வாறு மக்கள் அத்தியாவசிய பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொருவருக்கும் 1 கிலோ கிராம் சீனி, 5 கிலோ கிராம் அரிசி என வழங்கப்பட்ட போதிலும் மக்கள் இதனை விட கூடுதலாக வழங்கவேண்டும், மிக நீண்டநேர காத்திருப்புக்கு இது போதாது எனவும் தெரிவிக்கின்றனர்.



# மக்காவில் அரஃபா உரை: இனி தமிழிலும் ஒலிக்கும்

மக்காவில் இனி தமிழிலும் அரஃபா உரை வாசிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மக்காவின் தலைவர் அப்துல் ரஹ்மான் அல்-சுதைஸ் தெரிவிக்கையில்,

''மதினா, மக்காவின் வளர்ச்சிக்கும், சேவைக்கும் சவூதி அரசு அனைத்து ஆதரவையும் வழங்கி வருகிறது. அரஃபா உரை மொழிபெயர்ப்பு இந்த வருடம் ஐந்தாவது வருடத்தில் நுழைந்துள்ள நிலையில், இத்திட்டம் 14 மொழிகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதன்படி ஆங்கிலம், பிரெஞ், மலாய், உருது, பெர்சியன், சீன மொழி, துருக்கிய மொழி, ஸ்பெனிஷ் போன்ற மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இதில் தமிழ், வங்காளம் போன்ற மொழிகளும் இணைந்துள்ளன.

அரஃபா உரை மொழிபெயர்ப்பு என்பது உலகத்திற்கான ஒரு பரந்த திட்டமாகும், குறிப்பாக, புனிதத் தலங்களுக்கு வருபவர்கள், அரபு அல்லாத மொழி பேசுபவர்கள் தங்கள் தாய்மொழியில் கேட்க உதவுகிறது. இத்திட்டம் சுமார் 20 கோடி பேருக்கு பயனளிக்கும்.

யாத்திரிகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு சேவை செய்ய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இஸ்லாத்தின் நிதானம் மற்றும் சகிப்புத்தன்மை பற்றிய செய்தியை உலகிற்கு தெரிவிக்க தலைமை ஆர்வமாக உள்ளது. அதன் பொருட்டே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. யாத்திரிகர்களை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை மன்னர் சல்மான் எப்போதும் வலியுறுத்துவார், மேலும் இந்த பணியை தொடர்வதில் சவூதி அரேபியா எப்போதும் பெருமிதம் கொள்ளும்" - என்றார்.

# உலக செய்திகள்

# அமெரிக்காவின் 246ஆவது சுதந்திர தினம்: அணிவகுப்பின்போது துப்பாக்கிச்சூடு; அறுவர் பலி



அமெரிக்காவின் 246ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் 4ஆம் திகதி வாணவேடிக்கை, பல்வேறு கலை நிகழ்ச்சி, அணிவகுப்புகளுடன் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்க சுதந்திர தின அணிவகுப்பின்போது மர்ம நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். மர்ம நபரை மடக்கிப்பிடித்த பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

டெக்சாஸ் மாகாண பாலர் பாடசாலையொன்றில் கடந்த மே மாதம் மர்ம நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர். இந்த அதிர்ச்சி அடங்குவதற்குள் மீண்டுமொரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் அரங்கேறியுள்ளது.

சிக்காகோவின் ஹைலேண்ட் பூங்காவில் அமெரிக்காவின் சுதந்திர தின அணிவகுப்பின்போது, மர்ம நபர் ஒருவர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினார். அப்போது சம்பவ இடத்திலேயே 6 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ரொபர்ட் கிரிமோ (வயது 22) என்ற சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இதுகுறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,

''தாக்குதல் நடத்திய குற்றவாளி மொட்டை மாடியில் நின்றுகொண்டு அதிக சக்திவாய்ந்த துப்பாக்கியை கொண்டு நூற்றுக்கணக்கானோர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார். அதனால் சம்பவ இடத்திலேயே 6 பேர் இரத்த வெள்ளத்தில் சரிந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்'' - என்றனர்.

சிக்காகோ துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவிக்கையில், ''துப்பாக்கி வன்முறை தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் நான் பின்வாங்க மாட்டேன். துப்பாக்கிச்சூட்டில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்கிறேன்'' - என்றார்.

### அமெரிக்காவில் 246ஆவது சுதந்திர தினம்

அமெரிக்காவில் சுதந்திர தின விழா வண்ண வண்ண வாணவேடிக்கை, பல்வேறு கலை நிகழ்ச்சி, அணிவகுப்புகளுடன் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

246ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிய மக்கள் பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா சென்றனர். வேர்ஜினா மாகாணத்தில் போடோமேக் நதி அருகே நடைபெற்ற பகல்நேர குடியரசு தின வாணவேடிக்கைகளை காண மக்கள் திரண்டனர்.

வொஷிங்டன், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுந்தந்திர தினத்தை முன்னிட்டு பல்வேறு கருத்துகள் அடங்கிய அணிவகுப்புகளில் இராணுவ வீரர்கள் உள்ளிட்டோர் ஈடுபட்டனர்.

ட்ரோன்கள் வானில் பல்வேறு வடிவங்களில் தோன்றி ஜாலம் நிகழ்த்தின. இரவில் கண்கவர் வாணவேடிக்கைகள் காண்போர் கண்களை கவர்ந்தன.

# அந்தமானில் 2 நாட்களில் 24 நிலநடுக்கங்கள்




அந்தமான் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் கடந்த 2 நாட்களில் 24 நிலநடுக்கங்கள் ஏற்பட்ட நிலையில், நேற்று காலையும் நிலநடுக்கம் உணரப்பட்டது. ஆனால், எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

அந்தமான் கடலில் நேற்று அதிகாலை 5.55 மணியளவில் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கம் காரணமாக அந்தமான் நிக்கோபார் தீவுகள் குலுங்கின. இந்த நிலநடுக்கம் 5 ரிச்டர் அளவில் பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதுவரை எவ்வித உயிர்ச் சேதமோ, சொத்து சேதமோ ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கத்தின் மையம் தலைநகர் போர்ட் பிளேரிலிருந்து 215 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டது. அந்தமான் தீவைச் சுற்றியுள்ள பகுதியில் முதல் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 4.6ஆக பதிவானது. அதன்பின் அடுத்தடுத்த பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இவற்றில் பெரும்பாலானவை 4.5 ரிச்டர் அளவில் இருந்தன. இருப்பினும், கடந்த இரண்டு நாட்களில் குறைந்தது 24 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்க மையம் செய்துள்ளது.

# 14இல் பூமியை கடக்கும் இராட்சத வால் நட்சத்திரம்



எவரெஸ்ட் சிகரத்தைவிட இரண்டு மடங்கு பெரிய வால் நட்சத்திரம் சூரிய குடும்பத்தின் உட்பகுதிக்குள் நுழைந்து இம்மாதம் (ஜூலை) 14ஆம் திகதி பூமியை கடக்கவுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

Comet K2 என அழைக்கப்படும் இந்த வால் நட்சத்திரம், பூமியிலிருந்து 270 மில்லியன் கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் என்றும் தொலைநோக்கி இல்லாதவர்கள், மெய்நிகர் (Virtual) தொலைநோக்கியின் மூலம் வால் நட்சத்திரத்தின் பாதையை ஒன்லைனில் பார்க்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வால் நட்சத்திரம் முதன்முதலில் 2017ஆம் ஆண்டில் சூரிய குடும்பத்தின் வெளிப்புறப் பகுதிகளில் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

# இலங்கைக்கு கண்டனம் தெரிவிக்காமல் வேடிக்கை பார்ப்பதா?

## மத்திய அரசுக்கு வைகோ கண்டனம்

''இலங்கைக்கு கண்டனம் தெரிவிக்காமல் மத்திய அரசு வேடிக்கை பார்ப்பது தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி.'' - இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.



இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது தொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 68 பேரை விடுவிக்க தேவையான நடவடிக்கை எடுக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, தலைமை நீதிபதி முனிஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோரைக்கொண்ட அமர்வில், கடந்த மார்ச் கடைசி வாரம் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 68 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சுக்கு உத்தரவிட்டனர்.

இதன் பின்னர் ஏப்ரல் 2ஆம் திகதி, இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 400இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சென்ற மீனவர்கள், நெடுந்தீவு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி, மார்க்கோ என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை தடுத்து நிறுத்தி, அதிலிருந்த 12 பேரையும் கைதுசெய்து, விசைப்படகுடன் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டுசென்றனர். பின்னர் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தி 12 பேரையும் இலங்கைச் சிறையில் அடைத்துள்ளனர்.

ஜூன் 15இல், மீன்பிடித் தடைக் காலம் 61 நாள் முடிந்தவுடன், மீனவர்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஜூலை முதலாம் திகதி, புதுச்சேரி, காரைக்கால் மற்றும் மயிலாடுதுறை பகுதியைச் சேர்ந்த 12 மீனவர்கள் வேதாரண்யம் அருகே இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 12 மீனவர்களையும் கைதுசெய்து அவர்களின் விசைப்படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இதேபோல் நேற்றுமுன்தினம் 4ஆம் திகதி இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து 500இற்கும் மேற்பட்ட மீனவர்கள் விசைப்படகுகளில் மீன்பிடிக்கப் புறப்பட்டனர். இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் 5 பேரை கைதுசெய்ததுடன், மீன்பிடிக் கருவிகள் மற்றும் படகை பறிமுதல் செய்தனர். கைதுசெய்யப்பட்ட 5 பேரையும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

மீன்பிடித் தடைக் காலம் முடிந்து தற்போது மீண்டும் கடலுக்குச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் இந்திய கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து கைதுசெய்துள்ளனர். பொருளாதாரத்தில் நிலைகுலைந்துபோயுள்ள இலங்கைக்கு, இந்தியா வாரி வாரி வழங்கியபோதும் சிங்கள அரசு, இந்திய மீனவர்களை வேட்டையாடுவதைத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

மத்திய பா.ஜ.க. அரசு, இலங்கை அரசுக்கு உரிய முறையில் அழுத்தம் கொடுத்து, கண்டனம் தெரிவிக்காமல் வேடிக்கை பார்ப்பது தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். தமிழக மீனவர்களை இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து கைதுசெய்து, இலங்கை சிறையில் அடைக்கும் சிங்கள அரசின் அட்டூழியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவது எப்போது?''

- இவ்வாறு அந்த அறிக்கையில் வைகோ தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக!

## மத்திய அரசை வலியுறுத்தும் அன்புமணி ராமதாஸ்

இலங்கைக் கடற்படைகள் தொடர்ந்து அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றன. கைதான மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவை - என்று பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:

வங்கக்கடலில் கோடியக்கரை அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை மாவட்ட மீனவர்கள் 5 பேரை சிங்களக் கடற்படையினர் அத்துமீறி கைதுசெய்துள்ளனர். அவர்கள் இலங்கை எல்லைக்குள் நுழைந்ததாகக் கூறி காங்கேசன்துறை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

காரைக்காலிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி விலகும் முன்பே அடுத்த கைது படலமும், அத்துமீறலும் நடந்திருக்கின்றன. தமிழகத்தின் எதிர்ப்பும், கண்டனமும் சிங்கள அரசை அசைத்துக்கூட பார்க்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

தமிழக மீனவர்கள் மீதான சிங்களக் கடற்படையினரின் தொடர் அத்துமீறலை மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது. மீனவர்களை கைதுசெய்ததற்காக இலங்கை அரசுக்கு மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கவேண்டும்; இனி கைது கூடாது என்று இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்.

கடந்த இரு நாட்களில் கைதுசெய்யப்பட்ட 17 மீனவர்களையும் விடுவிக்கவும், இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து படகுகளையும் மீட்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களின் வங்கக் கடல் மீன்பிடி உரிமையை காக்க வேண்டும்.

- இவ்வாறு அன்புமணி தெரிவித்துள்ளார்.

# தெஹ்ரான் உட்பட நகரங்களை புரட்டிப்போட்ட புழுதிப் புயல்



ஈரான் தலைநகர் தெஹ்ரான் மற்றும் பிற நகரங்களில் மோசமான புழுதிப் புயல் வீசியது. காற்றின் தரம் மோசமாக இருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசு நடத்தும் தொலைக்காட்சி எச்சரிக்கை விடுத்தது.

அதன்படி நேற்றுமுன்தினம் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மூடப்பட்ட நிலையில் வங்கிகள் உள்ளிட்ட சேவைகள் மட்டும் இயங்கின.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஈரானை தாக்கிய நான்காவது மோசமான புழுதிப் புயல் இது என்றும் நாட்டின் மேற்கு மற்றும் ஈராக் எல்லை பகுதிகளில் அடிக்கடி இது போன்ற புழுதிப் புயல் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10 நிமிடங்களில் 63 'ஹொட் டோக்'களை சாப்பிட்டு சம்பியனான ஜோய்



நியூயோர்க்கிலுள்ள கோனி தீவு பகுதியில் விறுவிறுப்பாக நடைபெற்ற ஹொட் டோக் பன் சாப்பிடும் போட்டியின் ஆடவர் பிரிவில் நடப்பு சாம்பியன் ஜோய் செஸ்ட்நட் வெற்றிபெற்றார்.

அவர் 10 நிமிடங்களில் 63 ஹொட் டோக் பன்களை சாப்பிட்டு முதலிடம் பிடித்தார். மகளிர் பிரிவில் மிக்கு சூடோ என்பவர் 10 நிமிடங்களில் 40 ஹொட் டோக் பன்களை சாப்பிட்டு சாம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகப்பெரிய நீர் அல்லி



உலகின் மிகப்பெரிய நீர் அல்லியை அறிவியலாளர்கள் இனங்கண்ட நிலையில், அது நீரில் வளரும் ரைம் லேப்ஸ் காட்சிகள் வெளியாகியுள்ளன.

'விக்டோரியா பொலிவியானா' என பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய வகை நீர் அல்லியின் இலைகள், 3 மீற்றருக்கும் மேல் வளரக்கூடியது என்றும், அதிகளவிலான எடையை கூட தாங்கும் தன்மையுடையது என்றும் தாவரவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**01. வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை மீளமைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுவை உருவாக்கல்**

வாழ்க்கைச் செலவை நிலையாகப் பேணுவதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும் மற்றும் நடைமுறை ரீதியானதுமான தீர்வுகளை அமைச்சரவைக்குப் பரிந்துரைப்பதற்காக வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை மீளமைப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, வாழ்க்கைச் செலவு தொடர்பான உபகுழுக் கட்டமைப்பு கீழ்வரும் வகையில் அமையும்.

ஜனாதிபதி – (தலைவர்), பிரதமர், கடற்றொழில் அமைச்சர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், விவசாய அமைச்சர், பெருந்தோட்ட அமைச்சர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்.

அதேபோல், மேற்குறிப்பிட்ட வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையில் மற்றும் குறித்த அமைச்சுகளின் செயலாளர்களின் தலைமையில் உணவுப் பாதுகாப்புக் குழுவை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. நாட்டில் தற்போது நிலவுகின்ற பல்வேறுபட்ட கைத்தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்துப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கான மாற்றுப் படிமுறைகள்**

சீமெந்து/வோட்டர் ஜெல்/எமல்ஷன் உற்பத்திகள் மற்றும் கருங்கல் உடைத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்து இறக்குமதி செய்தல் / களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தலின் ஏகபோக உரிமை மட்டுப்படுத்தப்பட்ட அரச வியாபார (பொதுக்) கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நாட்டில் தற்போது நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணிப் பற்றாக்குறை மற்றும் குறித்த வெடிமருந்தின் நீண்டகால விநியோகத்தரான அரச வியாபாரக் (பொது) கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிப்பதற்கு இயலாமல் போனமையால் தற்போது நாட்டில் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், குறித்த வெடிமருந்தைப் பயன்படுத்தும் தொழிற்துறை நடவடிக்கைகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைக்குத் தீர்வாக குறுகிய காலத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டின்கீழ் துரிதமாக நாட்டுக்கு அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்தை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இந்தோனிசிய குடியரசின் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் (Letter of Intent) கையொப்பமிடல்**

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இந்தோனேசிய குடியரசின் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்புப் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதுதொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்காக இரண்டு நாடுகளுக்கிடையிலான உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு இந்தோனேசிய அரசால் முன்மொழியப்பட்டுள்ளதுடன், தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி உத்தேச ஒப்புதல் ஆவணத்திற்கு சட்ட மா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் கையொப்பமிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையிலான குற்றவாளியை மீள ஒப்படைத்தல் ஒப்பந்தம்**

குற்றவாளிகளை மீள ஒப்படைத்தலில் நீதிமன்ற ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் நோக்கத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையில் 2014ஆம் ஆண்டு குற்றவாளிகளை மீள ஒப்படைத்தல் ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த மீள ஒப்படைத்தல் ஒப்பந்தத்தின் 5(1)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இரண்டு நாடுகளின் நீதிமுறைமைக்குப் பொருத்தமான வகையில் மீண்டும் திருத்தங்களை மேற்கொண்டு, குறித்த மீள் ஒப்படைத்தல் ஒப்பந்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கும், பின்னர் 1978ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க மீள ஒப்படைத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசிலுக்கான ஜப்பான் உதவி நிகழ்ச்சித் திட்டம்**

அரச துறையின் நிறைவேற்று வகுதியிலான அலுவலர்களுக்கு ஜப்பானில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின் படிப்புப் பாடநெறியைப் பயில்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக ஜப்பான் அரசாங்கம் மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசிலுக்கான உதவி நிகழ்ச்சித் திட்டத்தை 2010ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இதுவரை 195 பட்டப்பின் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் மற்றும் 10 கலாநிதிப் பட்டத்திற்கான வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டில் 282 மில்லியன் ஜப்பான் யென் (கிட்டத்தட்ட 761 மில்லியன் ரூபா) வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பரிமாற்று ஆவணத்தில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் பணிப்பாளரின் ஒத்துழைப்புக்காக நிதி. பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் பிரிவுக்கான அலுவலகமொன்றை தாபித்தல்**

ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபை வதிவிடமற்ற பணிப்பாளர்களைக்கொண்டு அமைந்துள்ளதுடன், குறித்த பணிப்பாளர்கள் ஓர் அரசோ அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளுடன் கூடிய 12 பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவ்வங்கியின் ஆரம்பகால அங்கத்தவரான இலங்கையானது, வங்கியின் 11ஆவது பிரிவைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றது.

இந்தோனேசியா குறித்த பிரிவின் பிரதான பங்குதாரராவதுடன், இலங்கை, கம்போடியா, மியன்மார், லாவோசியா மற்றும் கிழக்குத் தீமோர் ஏனைய அங்கத்துவ நாடுகளாகும். அவ்வரசுகளுக்கிடையில் 2016ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய குறித்த பிரிவுக்குரிய பணிப்பாளர் பதவி மற்றும் மாற்றுப் பணிப்பாளர் பதவி சுழற்சிமுறையில் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. அதற்கமைய, 2022-2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவுக்கான தலைமைத்துவம் மற்றும் பணிப்பாளர் பதவியை வகிப்பதற்கு இலங்கைக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதுடன், அதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு குறித்த பதவி தற்போதைய நிலைமையில் கிடைத்துள்ளமை முக்கியமாக அமைவதுடன், குறித்த வங்கியின் பணிப்பாளர் சபை வதிவிடமற்ற பணிப்பாளர் சபையாக செயற்படுகின்றமையால், பணிப்பாளர் சபை மட்டத்திலான பணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கவேண்டியுள்ளது. அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் பிரிவுக்கான அலுவலகத்தை நிறுவுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. மட்டக்களப்பு விமான நிலையத்தில் விமானப் பயிற்சி நிறுவனமொன்றை நிறுவுதல்**

இலங்கை விமானப்படை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் மட்டக்களப்பு விமான நிலையம் உள்ளூர் விமானப் பயண நிலையமாக 2018ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டிருப்பினும், விமானங்கள் தரையிறக்கம் மற்றும் தரித்து வைத்தல் போன்ற கட்டணங்கள் குறித்த விமான நிலையத்தில் விடுவிக்கப்பட்டுள்ளமையால் தற்போது எவ்வித வருமானங்களையும் ஈட்டுவதில்லை. இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு குறித்த விமான நிலையத்தின் இடவசதிகளை வேறு பயனுள்ள செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, அவ்விமான நிலையத்தில் விமானப் பயிற்சி நிறுவனமொன்றை நிறுவுவதற்காக போட்டி விலைமனு அடிப்படையில் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08.விமான விபத்துகளுக்குள்ளாகிய நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களை நினைவுகூரும் சர்வதேச தினம் - இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை**

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைப்பின் ஆளுகை சபையால் அதன் 224ஆவது கூட்டத்தொடரின் 5ஆவது கூட்டத்தின்போது ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி விமான விபத்துகளுக்குள்ளாகிய நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களை நினைவு கூரும் சர்வதேச தினமாக பெயரிடுவதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கமைய, அத்தீர்மானத்திற்கு இணங்கியொழுகி இலங்கையிலும் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 20ஆம் திகதி விமான விபத்துகளுக்குள்ளாகிய நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களை நினைவுகூரும் சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்துவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விவசாயப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டம்**

சிறைச்சாலைக் கைதிகளை சிறைக்கூடத்தில் தடுத்துவைத்திருக்கும் முறைக்குப் பதிலாக அவர்களை நாட்டின் மனிதவளமாக கருதுவதன் மூலம் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களின் உழைப்பை நாட்டின் விவசாய அபிவிருத்தி ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் செழிப்பான – சிறைக்கூடத்திலிருந்து பயிர்நிலத்திற்கு எனும் பெயரிலான விவசாயப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனையின்கீழ் திறந்த சிறைச்சாலை முகாம்கள் மற்றும் வேலை முகாம்களில் உயர்ந்தபட்ச விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விவசாயப் பயிரிடலை மேற்கொள்ளவும், அதன்மூலம் கிடைக்கின்ற விளைச்சலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகவும் இவ்வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், போதைப்பொருட்களின் பாவனைக்கு அடிமைப்பட்டவர்களை புனர்வாழ்வளிப்பதற்காக பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் 03 புனர்வாழ்வு நிலையங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பணிகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக கிழக்கு மாகாணத்தில் கந்தகாடு மற்றும் நவசேனபுர பிரதேசங்களில் மகாவலி அதிகாரசபை மற்றும் தேசிய கால்நடைகள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயிரிடப்படாத 1,000 ஏக்கர் காணிகளைப் பெற்றுக்கொண்டு அவற்றில் 500 ஏக்கர் காணியில் சோளப் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய காணியில் அப்பிரதேசத்திற்குப் பொருத்தமான தானியங்கள், மரக்கறி மற்றும் பழவகைகளை புனர்வாழ்வளிப்பவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டம் தொடர்பாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த தகவல்களை அமைச்சரவை கருத்திற்கொண்டுள்ளது.

**10. இலங்கை சீட்டாட்டத் தொழில் (Casino Business) சட்டத்தை முறைமைப்படுத்தல்**

2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் மற்றும் 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் மூலம் இலங்கையில் சீட்டாட்டத் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சட்டத்தின்கீழ் இலங்கையில் சீட்டாட்டத் தொழிலை மேற்கொண்டு செல்வதற்காக உரிமங்கள் வழங்கப்படவேண்டியிருப்பினும், குறித்த சட்டத்தின் ஒழுங்கேற்பாடுகளை வலுவாக்கம் செய்வதற்கான கட்டளைகள் இதுவரை பிறப்பிக்கப்படாமையால், இதுவரை எந்தவொரு சீட்டாட்டத் தொழிலுக்கு குறித்த சட்டத்தின்கீழ் உரிமங்கள் வழங்கப்படவில்லை. இந்நிலைமையின்கீழ் தற்போது சீட்டாட்டத் தொழிலை மேற்கொண்டு செல்கின்ற நிறுவனங்களிடமிருந்து முறையான வகையில் குறித்த வரி அறவீடுகளை மேற்கொள்வது சிரமமாக உள்ளது.

அதனால், அவ்வாறான வியாபாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கு மற்றும் அரசால் அறவிடப்பட வேண்டிய குறித்த வரியை அறவிடும் நோக்கில் 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின்கீழ் கட்டளைகளை விதிப்பதற்கும், 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் பொருத்தமான திருத்தங்களை அறிமுகஞ்செய்வதற்கும் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தை திருத்தம் செய்தல்**

இலங்கை பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக கடப்பாடுகளைக்கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கான வலுவாக்கத்தை வழங்கவும், கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் தற்போது நடைமுறையிலுள்ள கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம் திருத்தப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவைக்கான திருத்தம் (101ஆம் அத்தியாயம்) (LXVIஆம் அத்தியாயத்தை இரத்துச் செய்தல்)**

சிறு உரித்து நீதிமன்றங்களுக்கான சிறப்பு நடவடிக்கை முறைக்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தி வேறானதொரு சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் மற்றும் சிறு உரித்து நீதிமன்றங்களை தாபிப்பதற்கும் 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களைக் கருத்திற்கொண்டு, சிறு உரித்து நீதிமன்றங்கள் தொடர்பான நடவடிக்கைமுறை ஏற்பாடுகள் உள்ளடங்கிய குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையின் LXVIஆம் அத்தியாயத்தை இரத்துச் செய்வதற்காக 2021 செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. சிறு உரித்து நீதிமன்ற நடவடிக்கைமுறை சட்டம்**

சிறு உரித்து நீதிமன்றத்திற்காக வேறானதொரு சிறப்பு நடவடிக்கைமுறை சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 2021 ஜூன் மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. நீதித்துறை ஏற்பாட்டு (திருத்தச்) சட்டமூலம்**

சிறு உரித்து நீதிமன்றத்திற்காக சிறப்பு நடவடிக்கைமுறையை அறிமுகப்படுத்தி வேறானதொரு சட்டத்துடன் கூடிய குறித்த நீதிமன்றத்தை தாபிப்பதற்காக 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2021 ஜூன் மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. 1990ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க மாகாணங்களின் மேல்நீதிமன்றங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

சிறு உரித்து நீதிமன்றம் எனும் வாசகத்தை உட்சேர்த்து 1990ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க மாகாணங்களின் மேல்நீதிமன்றங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 5(அ) உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக 2021 செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்ச சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. 2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

வெளிநாட்டு செலாவணி வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் அதிகரித்தமையாலும் எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் பொதுவான வாழ்வாதாரத்தைக் கொண்டுநடத்த முடியாது போயுள்ளமை, விவசாயம், போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி போன்ற துறைகளில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி மக்களுடைய வாழ்வு மோசமான விரக்திநிலையை அடைந்துள்ளது. இந்நிலைமையின் கீழ் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவை சமர்ப்பிப்பதற்காக 2022 ஜூன் மாதம் 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், பொருளாதார உறுதிப்பாட்டுக்காக வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வரி மறுசீரமைப்பை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய குறித்த அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு 2022ஆம் ஆண்டுக்கான 2021ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு-செலவு மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**17. நெல் விவசாயிகள் பெற்றுக்கொண்டுள்ள செலுத்தப்படாத விவசாயக் கடனை தள்ளுபடி செய்தல்**

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல், பின்னர் ஏற்பட்ட கொவிட் - 19 பெருந்தொற்று நிலைமையால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மேலும் மோசமடைந்து வருவதுடன், பொதுவாக அனைத்துத் துறைகள் மீதும் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களை ஏற்படுத்தியவண்ணமுள்ளது. இந்நிலைமை ஒட்டுமொத்த சனத்தொகையில் 30 வீதத்தினராகிய விவசாயிகளுக்கு தாங்கிக் கொள்வதற்கு சிரமமாக இருப்பதுடன், இரசாயன உரப் பாவனைக்குப் பதிலாக இயற்கை உரப் பாவனையை அறிமுகப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தால் விவசாயிகள் மேலும் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

இந்நிலைமையின் கீழ் நெற்பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளால் பெறப்பட்டுள்ள கடன்தொகையை மீளச் செலுத்துவதற்கு இயலாமல் போயுள்ளதுடன், குறித்த கடன்களை அறவிடமுடியாக் கடனாக வங்கிகள் வகைப்படுத்தியுள்ளன. அதனால், எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான கடன்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகமான விவசாயிகள் தகைமையற்றவர்களாவதற்கு வாய்ப்புள்ளமையால், அரச தலையீட்டில் அவர்களுக்கு சலுகைகளை வழங்குவது அத்தியாவசியமாகவுள்ளது. அதற்கமைய, இரண்டு ஹெக்ரயார் அல்லது அதற்குக் குறைவான காணியில் நெற்செய்கைக்காக அரச வங்கியிலிருந்து கடன் பெறப்பட்டு தற்போது மீளச் செலுத்துவதற்கு இயலாமல் போயுள்ள ஆரம்பக் கடன் தொகையை தள்ளுபடி செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)***

## 2022.07.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

# அமைச்சரவைத் தீர்மானங்கள்



# "இருவரும் எதிரெதிர் அணியில் ஆடுவதை சிறப்பாக பார்க்கிறேன்"

## கோஹ்லியுடனான வாக்குவாதம் குறித்து பெயர்ஸ்டோ



இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று நிறைவுக்கு வந்தது. இந்தப் போட்டியில் திடீரென விராட் கோஹ்லிக்கும், ஜோனி பெயர்ஸ்டோவுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம், ஆட்டத்தில் சூடேற்றிவிட்டது.

முதல் இன்னிங்ஸில் முதல் 65 பந்துகளில் 16 ஓட்டங்கள் மட்டும் எடுத்திருந்த பெயர்ஸ்டோ, விராட் கோஹ்லியுடனான கடும் வாக்குவாதத்திற்குப் பிறகு 54 பந்துகளில் 84 ஓட்டங்கள் குவித்தார். அவருடைய ஆட்டத்தில் பொறி பறந்தது. பந்துகளை எல்லைக்கோட்டுக்கு அடிப்பதிலேயே குறியாக இருந்தார்.

வாக்குவாதத்தின்போது வாயில் ஜாலம் காட்டாமல் ஆட்டத்தில் காட்டுமாறு கோபமாக செய்கை செய்ததால், அதற்கேற்ப ஆட்டத்தில் காட்டுகிறேன் என பந்துவீச்சாளர்களை நொறுக்கினார். அவர் சதமடித்ததும், கோஹ்லியும் கைதட்டி பாராட்டினார். போட்டி முடிந்ததும் கோஹ்லியுடனான வாக்குவாதம் குறித்து பேசிய பெயர்ஸ்டோ,

"இருவரும் எதிரெதிர் அணியில் ஆடுவதை சிறப்பாக பார்க்கிறேன். அவர் கிரிக்கெட்டில் பல சாதனைகளைப் படைத்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் பலருக்கும் ஐகானாக இருக்கிறார். ஆட்டத்தை சுறுசுறுப்பாக எடுத்துச் செல்வதில் வல்லவர். எங்கள் இருவருக்கும் இடையில் நடந்தது ஒன்றுமில்லை. சாதாரணமான ஒன்று" எனக் கூறினார். பெயர்ஸ்டோவின் இந்த பேச்சு ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

# ரமீஸ் ராஜாவுக்கு குண்டு துளைக்காத வாகனம்

**(ரமணி)**

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக குண்டு துளைக்காத வாகனத்தை தான் பயன்படுத்துவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ரமீஸ் ராஜா தேசிய சட்டமன்ற நிலைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக புல்லட் ப்ரூஃப் வாகனத்தை மட்டுமே பயன்படுத்தியதாக ஒரு கட்டத்தில் கமிட்டி உறுப்பினர்களிடம் ரமீஸ் கூறினார். ஆட்சிமாற்றத்திற்குப் பிறகு தலைவராக இருக்கும் அவரது எதிர்காலம் குறித்து தேசிய சட்டமன்றக் குழு உறுப்பினர்கள் யாரும் ரமீஸிடம் கேட்கவில்லை என்றும், அரசாங்கம் மாறிய போதெல்லாம் இராஜினாமா செய்வது பற்றி அவர் ஏன் நினைக்கவில்லையென்று யாரும் அவரிடம் கேட்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ரமீஸ் எந்த நாடாளுமன்றக் குழுவின் முன்பும் ஆஜராவது இதுவே முதல் முறை. ஆண்டு செலவுகள் குறித்த ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கையை வாரியம் ஏன் சமர்ப்பிக்கவில்லை என்று குழு உறுப்பினர்கள் ரமீஸிடம் கேட்டனர், அதற்கு முன்னாள் கெப்டன், இது அரசாங்க ஆவணம் என்றும் எந்த நேரத்திலும் தங்களுக்குக் கிடைக்கும் என்றும் பதிலளித்தார்.

ஆனால், உறுப்பினர்கள் அடுத்த கூட்டத்தில் ஏஜியின் அறிக்கையை சமர்ப்பிக்கும்படி அவரிடம் சொன்னார்கள். 2012-13 முதல் வாரியத்தின் கணக்குகள் ஏஜி அலுவலகத்தால் தணிக்கை செய்யப்பட்டுள்ளன என்பதை ரமீஸ் உறுதிப்படுத்தியதாக அந்த வட்டாரம் தெரிவித்தது.

அணியின் செயற்பாடுகள், எதிர்கால பொறுப்புகள், பி.எஸ்.எல். மற்றும் பிற வெளிநாட்டு அணிகளின் சுற்றுப்பயணங்கள் குறித்து கமிட்டி உறுப்பினர்கள் ரமீஸிடம் கேட்டதாக அந்த வட்டாரம் தெரிவித்தது.

"கடந்த செப்டெம்பரில் ரமீஸ் பொறுப்பேற்றதிலிருந்து பெரும்பாலான உறுப்பினர்கள் குழுவின் பணிகளில் திருப்தியை வெளிப்படுத்தினர் மற்றும் அணியின் செயல்பாடுகளைப் பாராட்டினர்" என்று அவர் மேலும் கூறினார்.



# பர்மான்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம் மீண்டும் ஆரம்பம்

**(ஏ. அகீல் சிஹாப்)**

'தமிழன்' ஊடக அனுசரணையுடன் றப்பானிய்யஹ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து பர்மான்ஸ் நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டு காத்தான்குடி மண்ணில் மிக பிரம்மாண்டமாக இரண்டாவது தடவையாக நடைபெறவிருந்த பர்மான்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம் - 2021 சுற்றுத்தொடர் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தலைசிறந்த 16 அணிகள் பங்குகொள்ளும் பர்மான்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம் 2021-2022 மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடர் எதிர்வரும் 14, 15, 16, 17ஆம் திகதிகளில் காத்தான்குடி விக்டரி விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




# இலங்கை டெஸ்ட் அணியில் புதிதாக மூவர் இணைவு

## மெத்யூஸும் அணிக்குத் திரும்பினார்




சுற்றுலா அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை டெஸ்ட் அணியில் சுழற்பந்துவீச்சாளர் மஹேஷ் தீக்ஷன, லக்ஷித மனசிங்க மற்றும் துனித் வெல்லாலகே ஆகியோர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சுழற்பந்துவீச்சாளர் லசித் எம்புல்தெனிய அணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். முன்னதாக நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின்போது அஞ்சலோ மெத்யூஸ் கொரோனா தொற்றுக்கு முகங்கொடுத்திருந்தார். இந்நிலையில் அவர் பூரண குணமடைந்து 2ஆவது போட்டிக்கான அணித் தேர்வில் இடம்பெற்றுள்ளார்.

முதல் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியை சந்தித்திருந்த நிலையில், நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள இரண்டாவது போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி இலங்கை அணி களமிறங்குகிறது. மறுமுனையில் நேற்று முன்தினம் சுழற்பந்துவீச்சாளர் பிரவீன் ஜயவிக்ரமவுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக அணிக் குழாத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 5 நாட்களுக்கு இவர் தனிமைப்படுத்தலிலிருந்து சிகிச்சைகளை பெற்றுக்கொள்வார் என இலங்கை கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com





காத்தான்குடி கே.எவ்.டி.ஏ. நடத்திய 32 அணிகள் பங்குகொண்ட உதைபந்து சுற்றுத்தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி விக்டெரி க்றீன் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏறாவூர் யங் ஸ்டார் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய லக்கி ஸ்டார் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. (படங்கள் - ஏ.எஸ்.எம். யாஸ்மின்)

# இந்திய ரசிகர்களை வம்பிழுத்த இங்கிலாந்து ரசிகர்கள்



இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் இந்திய ரசிகர்கள் அமர்ந்து போட்டிகளை கண்டுகளித்துக் கொண்டிருந்தபோது, சில இங்கிலாந்து ரசிகர்கள் இந்திய நிறம் குறித்து தொடர்ந்து கெட்ட வார்த்தைகளில் திட்டிக்கொண்டே இருந்திருக்கிறார்கள்.

சுமார் 10 நிமிடங்கள்வரை இங்கிலாந்து ரசிகர்கள் இப்படி சர்ச்சையாக கத்திப் பேசி வந்த நிலையில், இந்திய ரசிகர்கள் மைதான ஊழியர்களிடம் சென்று புகார் அளித்துவிட்டு, அப்படி சர்ச்சையாக கத்திப் பேசியவர்களை அடையாளமும் காட்டியிருக்கிறார்கள். ஆனால், ஊழியர்களோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல், உங்கள் சீட்டில் அமருங்கள் என இந்திய ரசிகர்களிடம் தெரிவித்துவிட்டு சென்றிருக்கிறார்கள்.

இதனால் அதிருப்தியடைந்த இந்திய ரசிகர்கள், இதுகுறித்து விளக்கமாக ட்வீட் செய்திருக்கிறார்கள். மேலும், முன்னாள் கவுண்டி அணி கிரிக்கெட்டர் அஜீம் ரபிக் என்பரை டேக் செய்து, இதற்கு நியாயம் சொல்லுங்கள் எனக் கேட்டிருக்கிறார்கள். அவர் இதனை ரீட்விட் செய்து, இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார். அதன்பிறகுதான் இந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

இந்த ட்வீட் உலகம் முழுவதும் பரவியதையடுத்து, இது குறித்து உடனுக்குடன் விசாரணை நடத்தப்படும் என இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. மேலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இனிமேல் இதுபோல் ஒரு சம்பவம் நடைபெறாது என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

கடந்த 2020-21இல் இந்திய அணி அவுஸ்திரேலியா சென்று கிரிக்கெட் விளையாடியபோது, மொஹமட் சிராஜை அவுஸ்திரேலிய ரசிகர்கள் சிலர் இனவெறி வார்த்தைகளால் திட்டி, அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் தொடரையும் பறிகொடுத்த இலங்கை மகளிர் அணி



இலங்கை மகளிர் அணியுடனான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் இந்திய மகளிர் அணி வெற்றிபெற்று 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரில் இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை 2 - 0 என கைப்பற்றியுள்ளது.

முன்னதாக நடைபெற்ற இருபதுக்கு 20 தொடரை 2-1 என வென்ற இந்திய மகளிர் அணி, ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி கண்டி, பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய மகளிர் அணி பந்துவீச்சை தெரிவுசெய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 173 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. பதிலுக்கு ஆடிய இந்திய அணி 25.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 174 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்று ஒருநாள் தொடரையும் கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையேயான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# எட்டு பேர் மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு

**(மாளிகைக்காடு நிருபர்)**

கல்முனை வலய மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், சாய்ந்தமருது கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தின் போட்டியாளர்கள் 8 பேர் வலய மட்டத்தில் வெற்றிபெற்று மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி போட்டிகளில் 3 முதலிடங்களும், 5 இரண்டாமிடங்களும், 3 மூன்றாமிடங்களும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.







நுவரெலியா கல்வி வலயத்திற்குட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற வலய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் 16, 18 மற்றும் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய அணி முதலாம் இடத்தைப் பெற்று மத்திய மாகாணத்தில் இடம்பெறவுள்ள மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது. (படங்கள் - தலவாக்கலை நிருபர்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7